REGD 4642 M.

சந்தா விபரம்
—
1 ஆண்டுக்கு 7.
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 9-4-50 | இதழ் 41

நல்ல யோசனை

"நமது புராதன ஆலயங்களில் இருக்கும் பெரிய மண்டபங்களையும் கோபுரங்களையும் பார்த்தால் இவை திருவிழாக்களுக்காக மட்டும் இல்லை, நமது அறிவையும், கலாச்சாரத்தையும் பெருக்க இருந்தன என்பது தெரியவரும். ஆயிரக்கணக்கான கிராமங்களில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் கூடக்கிடையாது. இதைப்பார்க்கும்போது நமது கலையை வளர்ப்பதற்காகவே நம் மூதாதையரால் கட்டப்பட்ட இந்த விரிந்து பரந்த அழகான கோயில்களை ஏன் உபயோகிக்கக்கூடாது என்று தோன்றுகிறது."

அமைச்சர் பக்தவத்சலம்

(4—4—50)

விசித்திரங்கள்

"நான் அப்பேற்பட்ட ஆளல்ல, நண்பர்தான் அப்படிச் செய்கிறார். புறப்படுமுன் ஜோசியம் பார்த்துவிட்டுத்தான் கிளம்புகிறார்."

பதில் சொன்னார் அவர் ஆத்திரத்துடன், "என்மீது குற்றஞ்சுமத்துகிறார் — இவரது யோக்கியதை இது" என்று சுட்டிக்காட்டுவது போலப் பதில் தந்திருக்கிறார், ஒரு கேள்விக்கு, கிழ்பஞ்சாப் பிரதமர் பீமஸேனசச்சார!

கேள்வி கேட்டுக் குற்றஞ்சாட்டியவரும் சாதாரணமானவரல்ல—சமீபகாலம்வரை பிரதமராகஇருந்தவர், மாகாண காங்கிரசின்செல்வாக்குள்ள நபர்களில் ஒருவர்—அவர் மாகாண சட்டசபையில் பிரதமர்மீது குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

"அகதிகள் வாழ்வில் அல்லல் இன்னும் நீடிக்கிறது — அவர்களுக்கான நன்மைகளைச்செய்யவேண்டும். ஆனால் தூங்குகிறது இந்தச்சர்க்கார்! — சுயஉணர்வுமிலலை, சொன்னதைச் செய்யும் புத்தியுமில்லை" என்றுபேசி மக்களுடைய குறைபாடுகளை மந்திரிமார்களிடம் தெரிவிக்கும் பொறுப்புடைய சட்டசபை உறுப்பினரான அவர், சட்டசபையில் பிரதமர்மீது சாட்டியக்குற்றம்—'ஜோசியம் பார்க்கிறார்!' என்பதுதான்.

சட்டசபையை எப்போது கூட்டலாம்,எந்தத்தேதியோடுமுடிக்கலாம். ஆரம்பநாள் நல்ல நாளா, முடியும் நேரம் இராகுகாலமில்லையே என்று ஜோசியரைக்கேட்டு, ஆலோசனை பெற்று அதன்பின்னர்தான் கிழக்குப் பஞ்சாப் சட்டசபை கூட்டப்படுகிறதாம் — இப்படிச் செய்யலாமா" என்பதுதான் மாஜிப்பிரதமரான கோபிசந்த்பார்க்வா விடுத்த கேள்வி.

வெத்துவேட்டல்ல, விபரம் காட்டிக்கேட்டிருக்கிறார், இந்த விளக்கத்தை. ஒரு ஜோசியர் வீட்டில் சர்க்காரின் போலீஸ் காத்துக்கிடக்கிறதாம் — இதைச் சுட்டிக்காட்டி, ஏன் இது, எதற்காக இச்செயல் என்று விளக்கம் விரும்பியிருக்கிறார்.

இதற்கு, பிரதமர் பீமசேனர் தந்த பதில்தான்.

"நான் அப்படிச் செய்யவில்லை — நண்பர்தான் அப்படிச் செய்வதாகத் தகவல் கிடைத்துள்ளது" என்பது.

* *

அது சந்தைக் கடையல்ல, விந்தைப் பேச்சும், வெட்டி வாதமும் விரும்பத்தகாத இடம். ஒவ்வொரு நிமிடமும், வீணுக்க முடியாது—வேகச்சொற்கள், காரசாரமான பேச்சு, கண்டனம், பதில் எல்லாம் நிகழவேண்டிய இடம் அது! ஆளவந்தார் இழைத்துவிட்ட தவறுகள், ஆட்சி வழி தவறுகிறது என்ற எச்சரிக்கை, இந்த ஏற்பாடு இன்னல் விளைவிக்கும் என்ற எடுத்துக்காட்டு, எதற்காக இந்த வீண்செலவு என்ற புத்திமதி—இத்தனையும் நிகழவேண்டிய—சட்டசபை. அங்கு ஒருவரின் கேள்வி.

"மழையில்லையென்று மக்கள் கஷ்டப்படுகிறார்கள். வருணஜபம் செய்தால் மழை பெய்யும்—சர்க்கார் வருணஜபம் செய்வார்களா? அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா!"

"மழையில்லையென்பது சர்க்காருக்கும் தெரியும். ஆனால் வருணஜபம் செய்வது சர்க்காரது வேலையல்ல"—இது அக்கேள்விக்கு சர்க்கார் சார்பில் தரப்பட்ட பதில். இந்த விசித்திர நிகழ்ச்சி நடைபெற்ற இடம்—வேறு எதுவும்ல்ல—நமது சென்னை சட்டசபைதான்!

பொறுப்புள்ளவர்கள் அவர்கள். எனினும் பொழுதைப் போக்கும் இடமாகக் கருதுகிறார்கள்—மக்களின் பிரதிநிதிகளாம், எனினும் கேலிக் கூடமாக்குகிறார்கள் ஒரு சட்டசபையை! மழை பெய்யவில்லையென்று சர்க்கார் வருண ஜபம் செய்யவேண்டுமாம் — எத்தனையோ கேள்விகளை அலட்சியத்தால் வெறுத்து ஒதுக்கும் அமைச்சர்களில் ஒருவர், மாதவமேனன், கவனத்தோடு இக்கேள்விக்குப் பதில் தந்திருக்கிறார்!

X X X

அவர் சிறந்த மேதாவி - 'அமெரிக்கா'வை இந்தியாவின் ஒரு மூலையிலிருக்கும் சமஸ்தானத்தில் காணத்துடித்தவர், அதற்கான நடவடிக்கைகளை எடுத்தவர். திருவாங்கூர் சமஸ்தானத்தின் திவானுகப் பல ஆண்டுகள் பதவி புரிந்தவர். போகாத நாடில்லை, பேசாத பிரசங்கமில்லை —'அப்பேற்பட்ட அறிஞர், சர்வதேச சாணக்கியர், அவர் போயிருக்கிறார் அந்த இடத்திற்கு-அங்குள்ள 'பகவானை' தரிசித்தாராம் - தகவல்கள் தருகின்றன பத்திரிகைகள்.

அவைகளின் பொறுப்பு மகத்தானது — தேசவாழ்வை, நினைத்தால் நடுங்கச் செய்யமுடியும்! நல்லவனைப்பொல்லாதவன் எனத் தூற்றச் செய்யலாம்—காற்றிலே கூட ககன மாளிகையைக் கட்டலாம்! அத்தகைய சக்தி வாய்ந்தவைகள்—பத்திரிகைகள்.

அவைகளில், தினசரி, நாள் தவறாது—நாம் குறிப்பிட்டது போன்ற செய்திகள் வெளிவந்து கொண்டேயுள்ளன—சி. பி. இராமசாமி அய்யர் இன்று 'பகவானை' தரிசித்தார்கள்.

சென்னை விவசாய மந்திரி அண்ணாமலைக்கு விஜயம் செய்தார்—பகவானைப் போய்க் கண்டார், திரும்பிய போது நமது நிருபரிடம் சொன்னார், "பகவான் சவுகரியமாயிருக்கிறார்" என்பதாக!

பிரபல டாக்டர்கள் கவனித்து வருகின்றனர். பேசாமலிருக்கிறார்-எனினும் அவரது பார்வை தனது பக்தகோடிகளுக்குக் கருணைபாலிப்பதாகவே இருக்கிறது.

இதுபோன்ற செய்திகள் —ஒரு ஆளைப்பற்றி. தினசரி, வெளிவந்த வண்ணமே யிருக்கின்றன. திருவண்ணாமலை இரமணரைப் பற்றி—ஒரு நாளைக்குக் கட்டுரை, இன்னொரு நாள் அவரது தபோ மகிமை பற்றி விளக்கம், இப்படிக் கட்டுரைகளும் செய்திகளும் பிரசுரிக்கப்பட்டவண்ணமேயுள்ளன.!

* * *

(4-ம் பக்கம் பார்க்க)

'மண்மாளிகை' கட்டும் 'மாஜிகள்!'

தாலியைக் கழற்றித்தந்தாள் அத்தையல்—வாங்கிக்கொண்டு புறப்பட்டான் கணவன், வேதனையோடு நிற்கும் மனைவியிடம் 'இதோ, வந்து விட்டேன் — அடுப்பில் உலையோடு, அரிசியோடு கொஞ்சநேரத்துக்கெல்லாம் வருகிறேன்' என்று கூறியபடி.

வீட்டிலே பசி! குடும்பத்தோர் வயிறு கொதிக்கிறது. பட்டினி — பலநாட்களாக! கணவனோ கவலையற்றுக்கிடக்கிறான், 'தோடுடையசெவியா போற்றி துயர் துடைப்பாய் என் ஐயா போற்றி'என்று போற்றிப்புகழ் பாடிக்கொண்டு!

அவள் கண்களில் நீர் துளித்தது — பதறும் தன் குடும்பத்தினரைக் கண்டபொழுது — குமுறிய நெஞ்சத்தோடு தாலியைக் கழற்றினாள்—தந்தாள்! 'போய், உடனே இதை விற்றாவது அரிசி வாங்கி வாருங்கள்' என்று அழுகுரலோடு சொன்னாள்.

தாலி — புண்ணியக்கயிறு என்று எண்ணுபவள் அவள், கழற்றுவது பாவம் என்ற நம்பிக்கையுடையவள். என்செய்வது! பசிவந்திடப் பத்தும் பறக்காதா, என்ன!!

கையிலே தையல் தந்த தாலி — வீதிவழியே போய்க்கொண்டிருக்கிறான், பக்திப்பாமாலைப் பாடிக்கொண்டு, சொத்துச் சுகத்தை இழந்து பராரியாகிவிட்ட பக்தன்.

"சாம்பிராணி! சாம்பிராணி!" என்ற சப்தம், பக்தனுடைய காதிலே விழுந்தது — எதிரே சாம்பிராணி விற்றுக்கொண்டு வணிகரொருவர் வந்துகொண்டிருக்கிறார்.

பசி, பசியென்று வீட்டிலே பதறிக்கிடக்கும் மனைவி, மக்கள், குடும்பத்தார் நினைவு, 'சாம்பிராணி'ச் சப்தம் கேட்ட பக்தனுக்கு மறைய ஆரம்பித்தது.

மனைவியின் தாலி — வணிகன் கைக்குப் போயிற்று. கைநிறையச் சாம்பிராணி — பக்தன் பரவசத்துடன் பக்கத்திலிருக்கும் பரமசிவன் கோயிலுக்குள் புகுந்தான்.

மனைவி வீதியை பார்த்துக்கொண்டே நிற்கிறாள்—'அம்மா, சோச்சி' என்று ஓடிவரும் குழந்தைகள், பேசமுடியாது கண்களால் வேதனையைக் காட்டிக்கொண்டிருக்கும் குடும்பத்தார், இவர்களை நோக்கி 'இதோ வந்துவிடுவார். அடுப்பில் உலைகூடவைத்து விட்டேன் —வந்ததும் வடிக்கவேண்டியதுதான் பாக்கி' என்று சமாதானம் சொல்லிக்கொண்டு.

காத்துக்கிடந்ததுதான் மிச்சம்—கணவன் வரவில்லை! காரிகை நிற்கிறாள் கலங்கிய கண்களோடு—கணவன் கைகட்டி, மெய்போர்த்து, போற்றித் துதித்துக்கொண்டு நிற்கிறான் கோயிலில்!

• • *

இந்தக் கதையைச் சொல்லி, இப்படி எங்கும் ஏற்படவேண்டும், எல்லாக் குடும்பங்களும் இத்தகையதாகவேண்டும் என்று சொன்னால்—பித்தன் என்ற பட்டம் அல்லது உதவாக்கரை உபதேசி என்ற சுடுசொல் ஏதாவதுதான் கிடைக்கும்.

கை பிடித்த மனைவியின் தாலியை வாங்கி, அரிசி வாங்கி வருவதாகக் கூறி, அதைக்கொண்டு சாம்பிராணி வாங்கி புகைக்கும் கணவன் கதையை — கருத்திலே தெளிவுள்ளோர், விரும்பார், ஏற்கார்! எதற்கு இந்த வெறுப்புத் துறவு போதிக்கும் வீண் கதை, வேறு வேலையில்லையோ என்று வெகுண்டுரைப்பர்.

எனினும் அவர் இந்த மார்க்கமே —சன்மார்க்கம், சமரசம்தழைக்கும் நன்மார்க்கம் என்று போதித்திருக்கிறார்.

"இப்படியாகத்தானே எல்லாம் வல்ல என் அப்பன் பார்வதி சமேதனாய், ரிஷப வாகன ரூடனாய்..." என்று திண்ணைக் காலட்சேபம் செய்பவரல்ல, அவர்.

பக்திப் பஜனை செய்துகொண்டு, 'இகபர சுகங்களை வெறுத்துவிட்டேன். எம்பெருமான் திருவடி சேர வழி கண்டுவிட்டேன்' என்று குதித்துக் கூத்தாடும் கூட்டத்தைச் சேர்ந்தவருமல்ல.

சிறந்த அறிஞர், ஒரு பெரிய நாட்டின் பொக்கிஷ மந்திரியாக இருந்தவர், பொருளாதாரத்தையே கரைத்துக் குடித்தவர் — அவர் இந்தப் போதனை புரிந்திருக்கிறார்.

நல்ல வேளை! நாம் தலைப்பில் தந்த கதையைக் கூறித் தம் கருத்தைத் தெரிவிக்கவில்லை அவர். கூட்டாக, இதுபோன்ற கதைகளைக் கொண்ட ஒரு நூலைப்பற்றித்தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட்டு 'இதுபோன்ற நூல்களின் பெருமையைப் பேசிப் பிரசங்கங்கள் நடத்தவேண்டும். அப்போதுதான் தமிழ் இலக்கியம் வளர முடியும்' என்று இதோபதேசம் செய்திருக்கிறார்!

X X X

பேரறிஞர் என்று சொன்னீர்! பித்தரும் விரும்பாக் கதையொன்றைத் தந்தீர்—பின் அப்பேரறிஞர் இதுபோன்ற கதைகளைக் கொண்ட நூலைப் படித்துப் பரவச்செய்ய வேண்டும் என்று சொன்னார் என்று சொல்கிறீர்!—இது என்ன வியவசாரம், என்று நண்பர்கள் நினைப்பர்.

ஆமாம்! அத்தகைய அறிஞர்தான், ஒருபோது பகுத்தறிவு இயக்கத்தின் தலைவராகக்கூட இருந்தவர்தான், ஒட்டவா வீரர் என்றும் மட்டிலாச் செல்வர் என்றும் மகிழ்ச்சிப் பத்திரங்கள் பெற்றவர்தான்—அண்மையில் பேசியிருக்கிறார்,

"அறிவு வழியை எடுத்துக்காட்ட புராணங்கள் மூலம் விளக்கப்பட்டன."

"தலை சிறந்த தமிழ் இலக்கியம் பெரிய புராணம். தொண்டின் விசேஷத்தையே அது விளக்குகிறது."

"பெரிய புராண கர்த்தா சேக்கிழார் சேவையின் முக்கியத்துவத்தைப் பற்றி விரிவாக எடுத்துரைத்திருக்கிறார்."

கோவைச் சீமான் ஆர். கே. சண்

முகம் அவர்கள் பேரூரில் துவக்க விழா செய்தாராம் — அதுபோது இந்த மணிவாசகங்களைச் சிந்தியிருக்கிறார்.

துவக்க விழா!—எதற்குத் தெரியுமோ? — பேரூர் பட்டீஸ்வர ஸ்வாமி தேவஸ்தான பங்குனி உத்திர உற்சவத்துக்கு!!

பேரறிஞர்—பேரூர் உற்சவத்துக்குத்துவக்கவிழாசெய்திருக்கிறார்!

"வேறுதான் வேலையில்லையே! கூட்டமோ — மாநாடோ, பேச இடமோ எங்கேயிருக்கிறது — எனவேதான் அவர் அங்கு போயிருக்கிறார், பேசியிருக்கிறார், மணிவாசகங்களை உதிர்த்திருக்கிறார்" என்று கூறத் தோன்றும் நண்பர்களில் பலருக்கு.

நண்பர்களின் இக்கருத்தையேற்க நாம் விரும்பவில்லை. எனினும் 'மாஜி' மந்திரியான ஆர். கே. எஸ். அவர்களின் இக்கருத்துக்களைக் கண்ட பொழுது நமக்கு முதலில் சிரிப்பு வந்தது—பின்னர் கேள்விகள் எழும்பின. சீமானாயிற்றே அவர், அவரது சிந்தனையைப்பெற அரசாங்கமே துடித்துக்கிடக்கிறதே, அப்பேற்பட்டவர்பெரியபுராணப்பிரசங்க பூஷணமாகவா விரும்புவார்—ஏனோ இந்நிலை—எதற்காக இந்நிலை? — என்று பற்பல விதமாக!

X X X

வக்காலத்து வாங்கப் புறப்பட்டிருக்கிறார்கள்—அரசியல் அஞ்ஞாதவாசிகளாகப் போவதாக வெளியிட்டுவிட்டு, ஆட்சிப்பீடம்அமர்ந்து நாடாண்டுவிட்டு வந்திருப்பவர்கள்.

பெரியபுராணப் பெருமை குறித்துப் பிரசங்கம் புரிந்திருக்கிறார் மாஜி நிதிமந்திரி! அதற்கு மறுநாள் ஏப்ரல் முதல்தேதி காரைக்குடியில் கம்பராமாயணத்தின் கலாச்சாரப் பெருமை, பக்திப் பெருக்குப் பற்றி 'பரந்த கருத்துக்களை' வெளியிட்டிருக்கிறார் 'மாஜி' கவர்னர் ஜனரல் இராசகோபாலாச்சாரியார் அவர்கள்.

"பக்திரச காவியங்கள் மனித வர்க்கத்தின் வளர்ச்சிக்கு அவசியமான நூல்கள்"

"கலாச்சாரமும் பக்தி வளர்ச்சிக்கு இராமாயணமும் மகாபாரதமும் ஜீவ சக்திவாய்ந்தவை"

பக்திப்பாலம் கட்ட அன்பர் சி. ஆர். அள்ளிவீசியிருக்கும் கருத்துக்கள் இவைகள்.

இராமாயணம் — பக்தியை மட்டுமல்ல கலாச்சாரத்தையும் வளர்க்கிறதாம்—துணிந்து வெளியிட்டிருக்கிறார், பொதுமக்களிடையில்!

'சாதாரண' சி. ஆர். ஆக இருந்த போது அவர் கூற அஞ்சிய வார்த்தைகள் — 'கவர்னர் ஜனரலா'க இருந்துவிட்டு வந்தபின் புறப்பட்டிருக்கின்றன!

சக்தி தேடியபொழுது, 'சவுக்கடிகள்' கிடைக்குமே யென்றிருந்த அச்சம் 'சக்திப் பீடம்' அமர்ந்து திரும்பிய பின் பறந்து விட்டது போலும்! கூறியிருக்கிறார், கலாச்சாரம் வளருமாம், கம்பராமாயணத்தால்!

குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான் — பாகவதர், ஜானகி சமேத ரகுகுல ராமச்சந்திரன் தூதுவனை அனுமாரைப் பற்றிக் காலட்சேபம் செய்து முடித்தார். தூங்கியவனை எழுப்பினான் அவன் தோழன்—கேட்டான் 'அனுமார் புகழ் தெரியுமா!' தூங்கிய நண்பன் பதில் சொன்னான் 'தெரியும். அதற்கு வாலுண்டு — சேஷ்டையுண்டு—அது ஒரு குரங்குதானே!' என்று.

வேடிக்கையான பேச்சு—அனுமார் ஆழ்வார் ஆனதன் விபரங்களைக் கூறினார் பாகவதர். பக்தி சிரத்தையுடன் காலட்சேபம் கேட்கப்போனவனே தூங்கினான் — அவ்வளவு அதிகமாகிவிட்டது பக்தி சிரத்தை! தூங்கியவனைக் கேட்டான் அவன் தோழன் அனுமான் யாரென்று? பதில்—குரங்குகளில் ஒன்று என்று கிடைத்தது!

கிராமீயக் கதை இது — இராமாயணம்கேட்கப்போய் தூங்கியவனைக் கேலி செய்யக் கூறுவதுண்டு. குட்டிக் கதைகளில் பேர் போனவர் ராஜாஜி — கதை கூறும் கருத்தை அறிய முடியாதவரல்ல. எனினும் கலாச்சாரம், பண்டைப் பண்பாடு இராமாயணத்தைப் பரப்புவதால், விளங்குமாம்! விரியுமாம்!

காலட்சேபம் கேட்கப் போகிறான் கந்தன்—முடிந்து அவன் வீடு திரும்புகையில் அவனைக் கேட்டால் சொல்வான் 'ஸ்ரீராமபிரான் கடவுள். அனுமார், சுக்ரீவன் குரங்குகள்' என்று விளக்கமாக!

இதுதான் இராமாயணத்திலிருக்கிறது—தென்னாட்டு 'தண்டகாரண்யமும்' அங்கு வாழ்ந்த மக்கள்

(அடுத்த பக்கத்தில்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சி நடத்துபவர் — எனினும் குற்றஞ் சாட்டியிருக்கிறார் தனது சகாக்கள்மீது! கம்யூனிஸ்டுகளின் கலவரம் ஆந்திராவில் அடக்கப்படாததற்குக் காரணம் அங்குள்ள மக்கள் ஒத்துழைக்காததால்தான்—என்றுபட்டேல்இந்தியப்பார்லிமெண்டில் கூறியுள்ளார். மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் சென்னை சட்டசபை உறுப்பினர்களோ, 'சர்க்கார் போதிய நடவடிக்கை யெடுக்கவில்லை. எனவேதான் கம்யூனிஸ்டுகள் கலவரம் ஒடுங்கவில்லை' என்று குற்றஞ் சுமத்தி யிருக்கின்றனர்.

பொதுமக்கள் ஒத்துழைக்கவில்லை யென்று கூறிவிட்டு பிரகாசம் போன்ற ஆட்கள்தான் காரணம் என்று சில தேசிய பத்திரிகைகள் குற்றஞ் சாட்டுகின்றன.

பட்டேல் மக்கள்மீது குற்றஞ் சாட்டுகிறார் — எம். எல். ஏ.க்கள் சர்க்காரைக் காய்கின்றனர்—தேசிய பத்திரிகைகள் காங்கிரஸ் பிரமுகர்கள்மீது பாய்கின்றன! முக்கோண வடிவில் தகராறு உருவாகியிருக்கிறது கம்யூனிஸ்டுகள் குறித்து! ஒத்துழைக்கவில்லையென்றால் ஆதரிக்கிறார்கள் என்று அர்த்தம். ஆனால் ஆட்சியாளரோ, மக்களிடம் கம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவில்லையென்று கூறிவருகின்றனர்—நிலைமையும் அப்படித்தான் இருக்கிறது. ஆனால், பட்டேல் மக்கள் ஒத்துழைக்கவில்லை யென்கிறார் — அவரது கட்சியைச் சார்ந்த பிரதிநிதிகளோ சர்க்கார் போதிய நடவடிக்கை யெடுக்கவில்லை யென்கின்றனர் — பத்திரிகைகளோ பிரகாசம் போன்றோர் காங்கிரசுக்குள்ளேயே 'கலாட்டா' செய்து கொண்டிருப்பதால்தான் கலவரங்கள் ஒடுக்கப்படவில்லையென்று கூறுகின்றன.

ஆந்திராவில் தினசரி கலவரங்கள் நடந்துகொண்டிருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டே யிருக்கின்றன. இந்த நேரத்தில் இந்திய உபகண்டத் துணைப் பிரதமரின் 'விளக்கம்' வெளிவந்திருக்கிறது—வேதனை நீக்கும் யோசனைகள் வெளிவரவில்லை!

✱

(முன் பக்கத் தொடர்ச்சி)

குரங்குகளாகவும் தீட்டப்பட்டிருக்கிறது—தமிழ் நாட்டில் இந்த இராமாயணப் பெருமையைப் பரப்பினால், தமிழ் மக்களிடையே கலாச்சாரம் வளருமாம்! எந்தக் கலாச்சாரம்?—எவரும் இக்கேள்வியைக் கேட்கவில்லை. எனினும், எந்த எண்ணம் தனது இருதயத்தில் கிடக்கிறது என்பதையும் சி. ஆர். கூறியுள்ளார்.

பக்தி வளரும்

பக்தி வளருமாம்!—யார் மீது?—ராமன் மீது!!

ராமன் — தென்னாட்டின்மீது படையெடுத்து வந்த ஆரிய மன்னர்களில் ஒருவன்—இவ்விதம் சரித்திரம் கூறுகிறது! அவன் கடவுள் ஆக்கப்பட்டான்—புராணீகர்களால்! அவன் மீது பக்தி வளரவேண்டும் என்று விளக்கமாக வலியுறுத்துகிறார் 'மாஜி, கவர்னர் 'ஜெனரல்'!

பக்தி உபதேசம் — சிந்தனைத் தெளிவுடன் கூறியிருப்பது. இராமாயணப் பாத்திரங்கள் தேவாகளல்ல—சீதையும் ராமனும் தெய்வங்களுமல்ல—அது தென்னாட்டுப் பரம்பரையினர் புதிதாக வந்த ஒரு இனத்தின் படையெடுப்புக்கு ஆட்பட்ட சோக வரலாறு—என்று சுயமரியாதைக்காரர்களாகிய நாம் சொல்லி வருகிறோம்!

பக்திப் பெருக்குடன், நமது மக்களை 'அனுமார்'களாக ஆக்கினான் கம்பன்—அடிமைப்பட்டான், தாசனானன் என்றுகூறி, வாழ்ந்த இனத்தின் பரம்பரையினரான, நாம் கண்டித்து வருகிறோம்!

பக்தி, ராமனிடம் தூண்டச் செய்வது — ஆண்ட மரபினரான வீரப் பரம்பரை வெளியிலிருந்து வந்த ஒருவனின் தாள் பணிந்த நிலையை நினைப்பூட்டுவது என்று நாம் கூறுகிறோம்!

வாழ்ந்த இனத்தை 'பக்தர்க'ளாக்கவே கம்பன் பாடினான், கட்டுக்கதைகளோடு—ஆகவே கம்பராமாயணம் கருத்துக்கேற்ற நூல் அல்ல என்று கண்டித்து வருகிறோம்!

பக்தியைப் போதிக்கிறது—அது வாழ்ந்த இனத்தை, 'வந்த' இனத்திற்கு அடிமைப்படுத்தும் செயல்—கம்பனைக் கண்டிக்கும்போது நாம் காட்டும் காரணம். பக்தியைத் தூண்டுவது ராமாயணம் — எனவே அதைப் படிக்கவேண்டும்—வெளிப்படையாக வெளியிடுகிறார், சி. ஆர்.! நமது கருத்தை எதிர்க்கிறார்! சொல்லப் பயந்ததை இப்போது சொல்கிறார் — துணிவோடு, கலாச்சாரத்தையும் பக்தியையும் பெருக்கும் நூல் கம்பராமாயணம், அதை எல்லோரிடையிலும் பரப்பவேண்டும் என்று!

X X X

தாலியைக்கழற்றித்தந்தையலும் குடும்பமும் தவிக்க, கோயிலில் குங்கிலியத்தைக் கொடுத்துவிட்டுக் கூத்தாடிக் கிடந்த குங்கிலியக்கலய நாயனார்—எண்ணாயிரம்சமணரைத் தூக்கிலேற்றிய ஞானசம்பந்தர்—பிள்ளையைக் கண்டதுண்டமாக்கிக் கறி சமைத்தது — மனைவியைப் 'பக்தனாக' வந்தவனுக்கு தத்தம் செய்த வேடிக்கை — நாட்டின் வரிப்பணத்தைக் கொண்டு பரி வாங்கச் சென்று, கோயில் கட்டிய மணிவாசகர் — இது போன்ற கதைகள் நிரம்பிய பெரிய புராணத்தில் பொதுச்சேவை பொதிந்திருக்கிறதாம்! இலக்கியச் செல்வம் இருக்கிறதாம்! அறிவு வழி காணப்படுகிறதாம்!—அறிவிக்கிறார் அறிஞர் என்று போற்றப்படுபவர்! சேவை என்றால் எது — பொதுச் சேவை என்றால் என்ன — புரியாதவரல்ல ஆர். கே. சண்முகம். எனினும், பங்குனி உத்திர உற்சவத்தை ஆரம்பித்து வைக்கையில் பெரிய புராணப் பிரசங்கியாக மாறியிருக்கிறார். அதற்கான இதோபதேசங்களைக் கூறவேண்டுமல்லவா — துணிந்து கூறியும் விட்டார், இலக்கியச் சுவையும் பொதுச் சேவையின் உயர்ந்த குறிக்கோளும் பொதிந்து கிடப்பதாக!

• • •

கம்பனின் காவியச் சுவை, சேக்கிழார் தரும் தமிழினிமை—இவைகள்மீது நமக்கு வெறுப்பில்லை, துவேஷமில்லை என்று எத்தனையோ தடவைகள் விளக்கியிருக்கிறோம்.

பெரிய புராணமும், கம்பராமாயணமும் பக்திரச நூல்களாகக் கருதப்படக் கூடாது. கடவுளின் லீலாவினோதங்கள் அவைகளில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் என்ற எண்ணம் மறைய வேண்டும்—சாதாரண கவிதை நூல்களாகக் கருதப்பட வேண்டும், பக்திரச நூல்களாகக் கருதப்படக் கூடாது என்று பல ஆண்டுகளாகக் கூறி வருகிறோம்!

காவியச் சுவை காணமுடியாதவர்களல்ல நாம்; ஆனால் காவியச் சுவையுடன் கருத்துக்குப் போதையும் தரப்படக் கூடாது—இது நமது எண்ணம்.

இதே கருத்தைக் கடந்த சில மாதங்களுக்கு முன் சென்னையில் நடைபெற்ற 'கம்பர் மாநாட்டில்' தலைமை தாங்கியோரும் ஏனைய ரசிக மணிகளும் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டிருந்தனர்.

"கம்பராமாயணத்தைக் காவியச் சுவைக்காகவாவது படிக்கவேண்டும். கதைகளின் கருத்துக்களுக்காக அதைப் புறக்கணிக்கக் கூடாது" என்று விளக்கி வெளியிட்டிருந்தனர்.

கதைகளின் கருத்தைக் கவனிக்காதீர்கள்—காவிய ரசனையைக் காணுங்கள்! பலநாள் எதிர்த்துப் பேசிய பண்டித மணிகளின் பிரசங்கம் இப்படியிருந்தது.

நாம் கூறிவந்த கருத்துக்களுக்கு இன்று நாடு செவி சாய்த்திருக்கிறது.

காவியமுணராக் கபோதிகள்!—கடவுள் பெருமையைக் கூறும் கம்பராமாயணத்தை எரிக்க வேண்டுமாம், கலைச்சுவையில்லா முரடர்கள்! சு. ம.-க்கள்! என்றெல்லாம் தூற்றியவர்கள்—இன்று காவியச் சுவைக்காகவாவது படியுங்கள் கம்பனை என்று கெஞ்சுகிறார்கள்!

இராமாயணத்தின் 'பெருமை' இன்று பள்ளிகளில கேலிக்குரியதாகிவிட்டது. 'ஸ்ரீராமபிரான்......' என்று ஆசிரியர் இன்று ஆரம்பிக்க முடியாது — பெரிய புராணத்தின் பெருமை, கம்பராமாயணத்தின் அருமை, இன்று மாணவர்களின் எண்ணங்களில், எவ்வளவு முயன்றாலும், புகாது! பரீட்சைப் பாடங்கள், எனவே படிக்க வேண்டும்—கவிதை நயம், எனவே கற்கவேண்டும் என்ற ஆசைதான் இன்று இளம் இதயங்களில் இருக்கின்றன!

பார்வதி சமேதனின் திருக்கல்யாண குண விசேஷங்களைச் செப்பு

வது கேளீர், பெரியபுராண வரலாற்றைப் பாரீர், என்று பண்டிதமணிகள் ஆரம்பித்த காலம் மாறிவிட்டது!

கம்பனின் காவியம்—சேக்கிழார் தந்த புராணம், இன்று மாணவர்களால் பக்தி மனப்பான்மையுடன் கற்கப்படவில்லை. இந்த மாற்றம் மக்கள் மன்றத்திலும் நிறைந்துவிட்டது.

கவிதைகள் மூலம் — புராணீகர்கள் கற்பித்த பொய் ஜோடிப்புகளை இன்று நாடு ஏற்காது—அந்த நல்லநிலை நாட்டில் மலர்ந்திருக்கிறது!

இந்நேரத்தில ஆச்சாரியார், விட்ட போரைத் துவக்க எண்ணுகிறார்!

'எரிக்கவேண்டும்' என்ற கிளர்ச்சி, இன்று ஓய்ந்துவிட்டது, எதற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த ஆசை சிறிது சிறிதாக நிறைவேறி வருகிற காரணத்தால்!

இந்த நேரமாகப் பார்த்து அவர், ஆரம்பிக்கிறார் 'பக்தி பெருகும்—இராமாயணத்தால்' என்ற போதனையை!

ஆச்சாரியார் வைணவர்—எனவே இராமாயணத்தைக் காக்கக் கச்சைக் கட்டுகிறார்!

ஆர். கே. எஸ். சைவர்—ஆகவே பெரியபுராணத்தின் பெருமைகளைப் பேசத் தலைப்படுகிறார்!

இந்தக் கருத்து — இரண்டு 'மாஜிகளின்' பிரசங்கங்களையும் காணும்போது, சாதாரணமாக எவர் இதயத்திலும் எழும்பும்.

மதப்பெருமைகளைக் காப்பாற்ற மாஜிகள், மாளிகை நிர்மாணிக்கப் புறப்படுகிறார்கள்.

பன்னெடுங்காலமாக ரிஷீஸ்வரர்கள், புண்ணிய புருடர்கள் ஆகியோரால் கட்டப்பட்ட 'மூட நம்பிக்கைக் கோட்டை' இன்றுமுற்றுகைக்காளாகிப் பொடிப் பொடியாகி வருகிறது.

தூளாகும் நேரத்தில் துவக்குகிறார்கள்—இந்த மாஜிகள் 'மத மாளிகை'களைக் கட்ட—சொத்தை வாதங்கள், இல்லாத பெருமைகள் ஆகியவைகளைக் கொண்டு!

மண்ணால் மாளிகை கட்டக் கிளம்புகிறார்கள்-பகுத்தறிவுப் புயல் பரவிக்கொண்டிருக்கிறது, புராணங்களைக் காட்டி மக்களிடையில் இதோபதேசம் செய்யும் காலம் மறைந்து வருகிறது.

இந்நேரத்தில் மாஜிகள் துவஜாரோகணம் செய்கிறார்கள் — மதப் பெருமைகளைக் காக்க!

வேறு வேலையில்லாததால் இந்த 'சத்' காரியத்தில பிரவேசிக்கிறார்களோ என்ற சந்தேகமும் எழும்புவதால்—இவர்களுக்கோர் யோசனை கூற விரும்புகிறோம்!

ரசியுங்கள், தமிழிலக்கியச் சுவையை நன்றாக ரசியுங்கள்,—நிறைய ஓய்வும் இருக்கிறது, வசதியும் இருக்கிறது.

ஆனால்ரசிகத்தன்மையைப் பக்திப் போதையுடன் கலந்து மக்களுக்குத் தர முற்படாதீர்கள் — மக்கள் வளர்ந்துவிட்டார்கள். அவர்களுக்குக் கட்டித் தர முற்படும் 'மத—மாளிகை' ஒரு மண் மாளிகை—அது எழும்ப முடியாது, எழும்பினாலும் பகுத்தறிவுப் புயலால் சுக்கு நூறாகிவிடும்!

★

கவனத்துக்கு

—❀—

"கட்டாய ஆரம்பக்கல்வித் திட்டத்தை அமுல் நடத்த இயலவில்லை. காரணம் போதிய ஆசிரியர்கள் இல்லாமைதான்" என்று அண்மையில் சென்னை சட்ட சபையில் கல்வியமைச்சர் மாதவமேனன் அறிவித்துள்ளார்.

ஆரம்பக் கல்விப் போதனைக்கு ஆசிரியர்கள் இல்லையாம்—அறிவிக்கிறார் அமைச்சர்! காலை முதல் மாலை வரை சிறு குழந்தைகளை அறிவுப் பாதையில் நடமாடத் தூண்டும் ஆசிரியர்கள் இல்லையாம்-தகவல் தருகிறார்.

ஆசிரியத்துறை—மிக மிக இன்றியமையாதது. வருங்கால உலகை வளம் நிறைந்ததாகச் செப்பனிடுபவர்கள் அவர்கள். துள்ளிவிளையாடும் சிறுவன் ஒருபோது சிறந்த சிந்தனைச் சிற்பியாவதும், அரசியல் அறிஞன் ஆவதும், அவன் பள்ளிப் படிப்பு எனும் படிக்கட்டுகளால் தான்! இந்தப் படிக்கட்டுகளில் மாணவர்களை இட்டுச் செல்லும் பொறுப்புப் படைத்தோர் ஆசிரியர்கள் — ஆனால், அவர்கள் வாழ்வில் வேதனை, வாழ முடியாத வறுமை தாண்டவமாடுகிறது!

போதிய சம்பளம் இல்லாமை—எவரையும் ஆசிரியத் தொழிலென்றாலே நடுங்கச் செய்கிறது. நாள் முழுதும் தொண்டை கிழியக்கத்தி, நலிந்து மெலியும் அவர்கள் வாழ்வு, வறுமைப் புயலில் சிக்கிச் சிதைந்து சின்னபின்னமாவதைக் காண எவரும் அத்தொழிலின் அருகே நெருங்கவும் அஞ்சுகின்றனர். இந்த ஏழ்மைக் காட்சியை அறியாதவரல்ல அமைச்சர்! தூது, வேண்டுகோள், மூலம் ஆசிரியர்கள் தங்கள் துயரகீதத்தை எத்தனையோ முறை தெரிவித்திருக்கின்றனர்- அமைச்சருக்கு!

எனினும் அவர் அறிவிக்கிறார்—போதிய ஆசிரியர்கள் இல்லாததால் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டத்தை அமுல் நடத்த இயலவில்லை என்று!

எப்படி ஏற்படுவார்கள் போதிய ஆசிரியர்கள், போதிய சம்பளமும் வாழ்க்கை வசதியும் இல்லாதபோது. தினசரி சுற்றுப் பிரயாணம், தண்டச் செலவு—நீடித்துக்கொண்டிருக்கிறது, இன்றையநிர்வாகத்தில்!

ஒழுங்கான முறையில், முக்கியமான பிரச்னைகளைத் தீர்க்கவோ—வழியில்லை, வக்கில்லையென்று முகாரி பாடுகிறார்கள்! இந்நிலையில் மாதம் ரூ 25ஐக் கொண்டே தனது வாழ்க்கையை நகர்த்திக்கொண்டு ஆசிரியர்கள் எங்ஙனம் வாழ முடியும்!

எனவே, எவரும் ஆசிரியர்களாக அஞ்சுகிறார்கள். இந்த அச்சம் நீங்க ஆளவந்தார் ஆவன செய்தால் தான் நலன் ஏற்பட முடியும்—இல்லையேல் எதிர்காலம் இருண்டதாகிவிடும்! இதைப்போக்க 'ஆசிரியர்கள் இல்லை' என்ற அறிவிப்பு பயனளித்துவிடாது!

—❀—

7-ம் பக்கத் தொடர்ச்சி

சாலை! வாழப் பிறந்தவன் சிறைச்சாலைக்குச் செல்கிறான், திருடனாகி விட்டு! வாழ்க்கையை வெறுத்தாகக் கூறப்படுபவருக்குச் சிம்மாசனம் 'ஸ்பெஷலாக'த் தயாராகியிருக்கிறது!!

வாழ்க்கையைத் துறந்தவரைத் தரிசிக்க மகா மேதைகள், கவர்னர் தம்பதிகள் செல்கின்றனர்—தினசரி நாட்டின் நாலுவிடங்களிலிருந்தும் டாக்டர்கள் வருகின்றனர்!

விசித்திரமான உலகம், வேதனை நிரம்பிய உலகம்!!

சிம்மாசனம் ★ சிறைச்சாலை!

சிம்ஹாஸனம்! — திகைக்காதீர்கள், சிம்மாசனம்தான், 'திவ்விய' பாஷையில் அப்படியே தரப்பட்டிருக்கிறது—புதிதாகத் தயார் செய்யப்பட்டிருக்கிறதாம். அந்த சிம்மாசனமும் சாதாரணமானதல்ல, 'ஸ்பெஷலாக'த் தயார் செய்யப்பட்டதாம், காட்டியிருக்கிறார்கள் நமது சென்னைக் கவர்னரிடம் — அவரும் அவரது மனைவியாரும் அந்தச்சிம்மாசனத்தைக் கண்டார்களாம்—இல்லை! இல்லை!! 'தெரிசித்தார்களாம்' — மகிழ்ச்சியோடு.

அவர் ராஜாதிராஜாராக இல்லாவிட்டாலும், ராஜாவாக இருந்தவர்—பவநகராண்டவர். அவரிடம் காட்டியிருக்கிறார்கள் சிம்மாசனத்தை! ராஜாதிராஜ, ராஜமார்த்தாண்டருக்காகச்செய்யப்பட்டதல்ல அந்தச்சிம்மாசனம். சாதாரண இகலோக இச்சைகளில் ஈடுபட்டோருக்கென்றால் சாதாரண சிம்மாசனமே போதும்—ஆனால் சிம்மாசனம் எவருக்கென்று செய்யப்பட்டதோ அவர் சாமான்யரா, என்ன! சகலத்தையும் கடந்த 'சத்' புருஷராயிற்றே—ஆகவே அவருக்காக 'ஸ்பெஷல்' சிம்மாசனம், செய்திருக்கிறார்கள்!

அந்தச் சிம்மாசனத்தை சிம்மாசனமேறி ராஜாவாகயிருந்து, இப்போது கவர்னராக இருக்கும், பவநகரைப் பார்க்கச் செய்திருக்கிறார்கள் — இல்லை! தரிசனம் செய்ய வைத்திருக்கிறார்கள்! — பக்தகோடிகள்!

முற்றுந்துறந்தவர், மோட்ச சாம்ராஜ்யத்துக்காக சிறுவயதிலேயே மோன நிலைபெற்றவர், பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை எலலாம் வெறுத்துப் புகழுடம்பு பெற்றவர் எனப் போற்றப்படுபவர் — அவருக்காகவேதான் 'ஸ்பெஷலாக' சிம்மாசனம் செய்திருக்கிறார்கள்!

சிம்மாசனம் — அரசவைகளிலே இருப்பவையென்று கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது, 'இந்து' இதழ் தந்திருக்கிறது, ஒரு புதுத் தகவல். புதிதாக, அதுவும் ஸ்பெஷலாகத் தயார்செய்யப்பட்ட சிம்மாசனம், அரண்மனையிலல்ல! ஆண்டிக் குடிசையில்!!

சுகதுக்கம் வெறுத்துச் சூன்யநிலையைப்பெற்றுவிட்ட ஒரு 'பகவானின்' பக்த மண்டபத்தில் சிம்மாசனம் தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறதாம் — கவர்னர் தம்பதிகள் அதைக்கண்டு மகிழ்ந்தார்களாம்!

அவர் ஒரு கோவணாண்டி—முழு உடை உடுக்க வசதியில்லை யென்றல்ல பொருள், இகபர இன்பங்களை வெறுத்ததால், மாயா உடலைப் போர்க்க 'சாமான்ய' உடையைக் கூடவிரும்பாத, பற்றற்ற பரப்பிரம்மம்! அவருக்குத்தச்சிம்மாசனம்—அதுவும் பிரத்யேகமாகத் தயார் செய்யப்பட்டது; தங்கத்தாலா, வெள்ளியாலா என்பது விளங்கவில்லை —சிம்மாசனத்தகவல் தந்த பத்திரிகையார் அதை மறந்துவிட்டார்போலும்!

கவர்னர் தம்பதிகளிடம் காட்டி இருக்கிறார்கள் சிம்மாசனத்தை — அவர்களும் பக்திசிரத்தையோடு அதையும் பார்த்திருக்கிறார்கள். உண்மையாகவா, சிம்மாசனத்தைக் காணாதவரா கவர்னர் பவநகர், அவர் மகாராஜாவாக இருந்தவராயிற்றே என்று சந்தேகங்கள் எழும்பலாம்—அவர் சிம்மாசனத்தைக்கண்டபொழுது பக்தி பொங்கிற்றோ பரவசம் கொட்டிற்றோ நமக்குத் தெரியாது—எனினும் 'இந்து' தந்திருக்கிறது, போன இடத்திலிருந்த "மஹரிஷியின்" ஆசீர்வாதங்களைப் பக்தி சிரத்தையோடு பெற்றாராம் அவர்!

* •

சிம்மாசனம்—வேறு எங்குமல்ல! சில பல நாட்களாக பத்திரிகைகளில் அடிபடுகிறதல்லவா 'இன்று இத்தனை தடவை பேசினார். அவரைக் காண நேற்று கல்கத்தாவிலிருந்து பிரத்யேக டாக்டர் வந்தார்' என்றெல்லாம், திருவண்ணாமலை ரமணரைப் பற்றி. அந்த 'மகரிஷி' பகவான் சந்நிதானத்தில்தான் சிம்மாசனத்தைத் தரிசித்திருக்கிறார்கள், மாகாணக் கவர்னர் தம்பதிகள்! மண்ணாசை பொன்னாசை துறந்த முனிபுங்கவர் 'குடிசையில்' சிம்மாசனம்!

X X X

சிம்மாசன தரிசனத் தகவல் தந்த "இந்து" இதழார், அதேநாளில் பிறிதோரிடத்தில் ஒரு செய்தி பிரசுரித்துள்ளார். இரண்டு அங்கவஸ்திரங்களை ஒருவன் திருடியிருக்கிறான்—சென்னை தியாகராயநகரில்! திருட்டு வெளிப்பட்டு சென்னை உயர்நீதிமன்றத்தார் அவனுக்குப் பத்து ஆண்டு கடுங்காவல் தண்டனை தந்துள்ளார்கள்.

இரண்டு அங்கவஸ்திரங்கள்—பத்துஆண்டுக்கடுங்காவல் தண்டனை!

திருடியதால் சிறைக்கனுப்பப்பட்டிருக்கும் பாலசுந்தரம் என்ற அந்த ஆள் குமானல்ல— சேட்டைக்காகத் திருடியவன் என்று கூறுவதற்கு! கிழவன்—வயது 60, அவன் திருடி இருக்கிறான் இரண்டு அங்கவஸ்திரங்களை! திருடன் அவன்—குற்றம் ருஜுவாகிவிட்டது — நீதி மன்றம் அவனைத் தண்டித்திருக்கிறது!

ஏன், திருடினான்—எதற்காக இரண்டு வேஷ்டிகளைத் திருடினான்? எழும்பக்கூடிய கேள்வி. நேரிடையானபதில் தெரியவில்லை—எனினும் அவன் ஏன் திருடனாகி இருக்கப்போகிறான். வேடிக்கைக்காக இரண்டு வேஷ்டிகளைத் திருட அவன் என்ன பித்தனா—இல்லை! திருடினான்—இல்லாததால்!!

X X X

'பிரமரிஷி', 'பகவான்' இகலோக சுகதுக்கங்களை வெறுத்து எல்லோருக்கும் கிருபாகடாட்சம் புரிய எழுந்தருளியிருப்பவர்— அவருக்கு சிம்மாசனம் செய்து தயாரிலிருக்கிறது!

ஏழை, வாழப்பிறந்தவன், வகையில்லாமல் திருடிவிட்டு — பத்து ஆண்டு காராக்கிரக வாசத்துக்குச் செல்கிறான்!

பக்திப் பாசுரம் பாடி பரமனை நாடிக்கிடக்கும் ரமணாஸ்ரமத்தில்—சிம்மாசனம்!

குமுறி அழுது, கொஞ்சம் திடப்புத்தியோடு திருடி, அகப்பட்டுக்கொண்ட வயோதினுக்குச் சிறைச்

(6-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

ஞாயிறு] 9—4—50 [காஞ்சி

நமது ஆசை

★

"நான் கொல்லப்பட்டேன் — நகைமுகம் காட்டி நல்லவன்போல் நின்றான். நம்பினேன்—என்னைக் கரம் நீட்டிச் சுட்டான்! சுருண்டு வீழ்ந்தேன்! என் மார்பை நோக்கிப் பறந்துவந்த குண்டுகள் என் உயிரைக் கொத்திச் சென்றன! நான் சாகவில்லை — கொல்லப்பட்டேன்!! சாகும் விருப்பமும் எனக்கிருந்ததில்லை — நூற்றிருபது ஆண்டுகள் வாழப் போகிறேன் என்று வெளியிட்டதுண்டு — என் விருப்பம் நிறைவேறவில்லை; வீழ்த்தப்பட்டேன்! வாழ முடியாது வீழ்த்தப்பட்டேன்! நான்கொல்லப்பட்டேன்!!

நெஞ்சிலே வஞ்சகம் நான் நினைத்தது கிடையாது, கபடம் நான் அறியாதது, விருப்பு வெறுப்பு வேண்டாத ஒன்று எனக்கு! விரோதிகள் எனக்கு இருந்தது கிடையாது—எனினும் நான் கொல்லப்பட்டேன், துப்பாக்கிக் குண்டுகள் துளைக்க நான் சுட்டுக்கொல்லப்பட்டேன்!

'பேதம் வேண்டாம்—பிளவு கொடிது' இதுதான் நான் போதித்தது. ஒற்றுமை வேண்டும் — இது தான் எனது தினசரி பிரார்த்தனை! எவருக்கும் தீங்கு செய்யாதவன் நான் — சிந்தனையிலும் அக்கருத்தைத் தீண்டாதவன், எனினும் கொல்லப்பட்டேன், குருதி மண்ணில் சிதற. நடந்துகொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டேன்!

மதபேதம் — கொடியது என்று சொன்னேன். மக்கள் யாவரும் சரிநிகர் சமம் என்று பேசினேன். இந்துக்களும் முஸ்லிம்களும் ஒரு தாயின் இரட்டைக் குழந்தைகள்—இந்தியாவின் இரண்டுகண்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளக்கூடாது. அன்போடு வாழ வேண்டும்—என்று பாடுபட்டேன்! எனது பஜனைகூட 'ராம்—ரஹீம்' என்றுதான் இருந்தது. எனினும் நான், துடித்து வீழ்ந்தேன், துப்பாக்கி அடிதாங்காது! சுட்டான்—என் பேத்திகளின் தோள்களில் சாய்ந்தேன்—செத்தேன்!

ராம் — ரஹீமாம்! சமரசமாம்! அன்பாம்—யாருக்கு வேண்டும் இது?—வீண்பேச்சு, வெட்டிவேலை —இந்த ஆசாமியை விடமாட்டேன் —என்ற கொடிய சிந்தனையோடு என்னைச் சுட்டுக்கொன்றான் கோட்சே. என்னைக் கொன்றது கோட்சேதான் — ஒரு சாதாரண மனிதப் பிறவிதான்! ஆனால், அவனை அக்கோடூரச் செய்கைக்குத் தூண்டியது—மதவெறி! ஆமாம், மதவெறி!!"

X X X

கல்லறை, இந்தக் கதையைச் சொல்லியிருக்கும் அவருக்கு! நினைவலைகள் அவர் நெஞ்சத்தைப் பிய்த்து எடுத்திருக்கும்—தன்னோடு அவர் அன்பு தவழப் பேசிய அந்த நாட்கள் இதயத்தைக் குத்திப் புண்ணாக்கியிருக்கும்!

"பிரிந்தபோது அவர் இருந்தார் தலைநகரில் — பிரிந்து சென்று மூன்றாண்டுகள் ஆகிவிட்டன. இப்போது அவர் இல்லை! — அவரது சமாதி இருக்கிறது. சமரசம் தழைக்கப்பாடுபட்ட அந்த உத்தமரை நான் சந்திக்கமுடியவில்லை—அவரது சமாதியைத்தான் காண்கிறேன். என்ன கொடுமை!"

என்றெல்லாம் அவரது இருதயம் பேசியிருக்கும். கலங்கியிருப்பார், மலர்களை மரியாதைக் காணிக்கையாகச் சமாதியின்மீது உதிர்த்தபோது! கல்லறையிலிருந்து எழும்பும் அந்த உத்தமரின் குரல் அவரது இதயமெங்கும் எதிரொலித்திருக்கும், "பாருங்கள். நான் சமரசம் போதித்தேன், அது தவறாம்! கொன்றுபோட்டுவிட்டது என்னை மதவெறி. இதோ சமாதி—நானில்லை!" என்ற வார்த்தைகளை.

இந்த எண்ணங்கள், அவர் இதயத்தில் ஈட்டியும் வேலும்போலபாய்ந்ததாலோ என்னவோ, பாகிஸ்தான் பிரதமர் லியாகத்அலிகான் இரண்டு நிமிடங்கள் மௌனமாக நின்றாராம் —மலர்ச்செண்டுகளை புதுடெல்லி, ராஜகட்டத்திலிருக்கும் காந்தியார் கல்லறைக்கு மரியாதைக் காணிக்கையாகச் செலுத்திவிட்டு.

களிப்போடு இருந்தபருவம்,எனினும் கடமைகளைக் களிப்போடு செய்துகொண்டிருந்த வேளை! அவர் சுட்டுவீழ்த்தப்பட்டார். துப்பாக்கி வெடிப்பதும் குண்டுகள் பறப்பதும் சகஜம், போர்முனையில்! ஆனால், பொதுக்கூட்டத்துக்குப் போய்க் கொண்டிருக்கையில் அவரது இதயத்தைக் குண்டுகள்பதம்பார்த்தன!

"மதவெறிகூடாது—அதுமாய்த்து விடும், மகத்தான நாசத்தை விளைவிக்கும். வேண்டாம் விரோதம் — வீணாக நமக்கேன் குரோதம் என்று அன்பு வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்தார். கூடாது, நாட்டை இரண்டாகப் பிரிக்கக்கூடாது, இந்தியா 'இந்துஸ்தான்— பாகிஸ்தான்' ஆகக்கூடாது என்று கூறினோம் — பாடுபட்டோம்! பத்துகோடி மக்களின் ஏகஆசை — அவர்களுக்கோர் தனிநாடாக ஆகிவிட்டது. எதிர்த்தோம் பாகிஸ்தான் வேண்டுமென்று கூறியபொழுது. கனவு அது, நனவாகமுடியாது என்றுகண்டித்தோம். காலம்மாறிவிட்டது! எதிர்த்தநாமே, பத்துகோடி மக்களின் இலட்சிய ஆசையின் வலிவைக் கண்ணாரக் கண்டபின், ஏற்றுக்கொண்டோம்! நாட்டை இரண்டாக்கவும் சம்மதித்தோம்—நாடும் இரண்டாகிவிட்டது. இனி நாம் நட்போடு வாழமுயல வேண்டும் — நல்லெண்ணம் கொள்ளவேண்டும் — சிறிப்பாய்வதும் மிரட்ட நினைப்பதும் கூடாது. விளைவு பயன்தராது" என்று அவர் போதித்தார் — நாட்டின் நலன் கருதி. மதமாச்சர்யத்தால் மனிதர்கள் மிருகங்களாகிவிடக் கூடாது என்று கண்டித்தார். வெட்டு! குத்து! அடி! சண்டை! நிறைந்து கிடந்த பிணக்காட்டில் நடந்தார் துணிவோடு—நவகாளி யாத்திரை செய்தார். நல்லெண்ணம் பரவப் பாடுபட்டார்—ஆனால் அந்த உத்தமரை, ஒழித்தது! நண்பரை :விரோதியென நினைத்தது—நாட்டுக்குப் பாடுபட்டவரை நயவஞ்சகர் என எண்ணியது —கடைசியில் சுட்டுவீழ்த்தியது, மதவெறி!

மாநிலம் போற்றிய மாவீரரைக் கொன்று வீழ்த்திய மதவெறியின் கோரப் பசி இன்னும் தீரவில்லை—கொக்கரிக்கக் கிளம்பியிருக்கிறது!

X X X

நாடு, காடாகிக் கொண்டிருக்கிறது —மக்கள் மனிதசுபாவம் மாறி அட்

டூழியங்களிலும் அடாத செயல்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்! நெஞ்சைக் கொதிக்கவைக்கும் சோகக் காட்சிகள், இரண்டு நாடுகளின் பிரதமர்களையும் சந்திக்க வைத்திருக்கிறது இருநாட்டின் எல்லைகளிலும் நடைபெறும் கொடூரச் செயல்களின் கொட்டத்தை அடக்க சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள், இந்தியப் பிரதமர் பண்டித நேருவும்-பாகிஸ்தான்பிரதமர் லியாகத்அலிகானும்.

நேருவும் — லியாகத்அலிகானும் புது நண்பர்களல்ல! ஒரே இடத்தில், ஒரே நிலையில் உலவியவர்கள். தோளோடு தோள் போட்டுக் கொண்டு டெல்லிமாநகரில் மந்திரிகளாயிருந்தவர்கள்—மூன்று ஆண்டுகளுக்குமுன்.

சந்தித்துப் பேசுவது இருவருக்கும் புதிய ஒரு நிகழ்ச்சியல்ல! லியாகத்தும்—நேருவும் புதிய நண்பர்களுமல்ல; பாகிஸ்தான் பிரதமருக்கு டெல்லிமாநகர் புதிய இடமுமல்ல!

எனினும், இந்தச் சந்திப்பு—வெளிநாடுகளில் அக்கரையையும் 'ஆரூடம்' கணிக்கும் ஆவலையும் தூண்டியிருக்கிறது. இலண்டன் பத்திரிகைகளில் தலையங்கங்கள்—அமெரிக்கப் பத்திரிகைகள் 'ஆச்சரியக் குறிகளுடன் செய்திகள்—அகில உலகமும் ஆழ்ந்து கவனிக்கிறது புது டெல்லியை!

பக்கத்து நாடுகளின் பிரதமர்கள் சந்தித்துப் பேசுவது சாதாரணமான விஷயம்—எனினும், நடக்க முடியாதது, நடப்பது போன்ற எண்ணம் பரவிக் கிடக்கிறது வெளிநாடுகளில்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்வரை, இருவரும் ஒரே இடத்தில் இருந்தவர்கள்—தினசரி சந்தித்தவர்கள், நட்போடு இருந்தவர்கள். இன்று அவர்கள் சந்திக்கிறார்கள், இரு நாடுகளின் சார்பில்! சந்திப்பில் 'இரு நாடுகளின் பிரதமர்கள்' என்ற விசேஷம் இருக்கிறது —எனினும் பிரமாதமான விஷயம் போல, ஸ்டாலினும் ட்ரூமனும் சந்திப்பதுபோலப் பேசப்படுகிறது, கருதப்படுகிறது, பிற நாடுகளில்!

சாதாரணமானது; ஆனால் பெரியதொரு நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது—நடக்காதது நடப்பதாகக் கருதப்படுகிறது! காரணம், அந்த அளவுக்கு மூன்று ஆண்டுகளில் இரு நாடுகளின் போக்கும் வளர்ந்திருக்கிறது. தப்பு எண்ணமும், தவறான கருத்தும், வெறுப்புப் பார்வையும், கோபப் பேச்சும்—நேற்றுவரை ஒரே நாடாகயிருந்து இரண்டாக ஆன இரு இடங்களிலும் நிலவி வருகின்றன.

பாகிஸ்தான்—காங்கிரஸ் கட்சியால ஒத்துக்கொள்ளப்பட்ட நாடு! எனினும், சந்தேகப் பார்வையும் சஞ்சலப் பேச்சும் அகலவில்லை.

இந்தியா—நேற்றுவரை, பிரிந்து சென்றோர் ஓடித்திரிந்த இடம்! எனினும் அச்சமும், ஆவேசப் பேச்சும் ஒடுங்கவில்லை.

காரணமில்லாத மன மாச்சர்யங்கள் இரண்டு நாடுகளிலும் தழைத்து வளர்ந்து விட்டன. எடுத்ததற்கெல்லாம் சந்தேகமும், சங்க நாதமும் எழும்பவே—பிரச்னைகள் பல உருவாயின. தகராறுகள் முளைத்தன, நீடித்துக்கொண்டிருக்கின்றன.

காஷ்மீரத் தகராறு, வியாபார ஒப்பந்தப் பிரச்னை, நீர்ப்பாசனச் சண்டை, நாணயச் செலாவணிப் பிரச்னை—பட்டியல் நீண்டுகொண்டேயிருக்கிறது, பரஸ்பர அவநம்பிக்கையால்!

அவநம்பிக்கையும், அடாத்டும் சுபாவமும் இருநாடுகளிலும் நீடித்த காரணத்தால் பலர் 'பாகிஸ்தான் இந்தியா போர்' என்ற வதந்திகளைப் பரப்பும் கைங்கர்யத்தில் ஈடுபட்டார்கள்.

ஆசியாவின் வாழ்வில்—இந்தியாவும் பாகிஸ்தானும் குறிப்பிடக் கூடிய இரு நாடுகள். எனவே, வளர்ந்து வரும் அமெரிக்க ஆதிபத்தியமும் — ரஷ்யக் கம்யூனிசமும் இரண்டு நாடுகளின் நிகழ்ச்சிகளிலும் அதிக அக்கரை காட்டி வருகின்றன.

இந்தியாவை அமெரிக்கா தன் வலைக்குள் போடத் திட்டம் தீட்டுவதாகத் தெரிந்தால், ரஷ்யாவின் கண் பாகிஸ்தான்மீது பாய்கிறது. இரண்டு நாடுகளிடையும் நிலவும் தகராறுகளைக் கொண்டுத் தங்களுக்கான ஆதரவை அதிகரித்துக்கொள்வதில் அதிக அக்கரை காட்டி வருகின்றன — முதலாளித்துவ முகாமும், பொதுவுடைமைக் கூடாரமும்!

அவைகள் எதிர்பார்ப்பது போலவே இருநாடுகளிலும் உள்ளோரும் எச்சரிக்கைகள் விடுத்துக் கொண்டனர் — இங்குள்ள பத்திரிகைகள் காரசாரமாகத் தீட்டின, 'பாகிஸ்தான் கொட்டத்தை அடக்க வேண்டுமென்று' பதிலுக்குப் பாகிஸ்தான் பிரச்சாரப் பீரங்கிகளும் முழங்கின! எனவே, புதிதாக உருவான இரண்டு நாடுகளிலும் நிலவும் அதிருப்தியைப் பயன்படுத்தித் தங்கள் ஆதிக்க வளர்ச்சியை அதிகரிப்பதற்குத் திட்டமிட்டிருந்த வெளிநாடுகள், இன்று புது டெல்லியை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருக்கின்றன.

X X X

கராச்சியிலிருந்து பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் வந்தார், இந்தியப் பிரதமர் நேரு அவரை எதிர்கொண்டழைத்தார், லியாகத் உத்தமர் காந்தியாரின் கல்லறைக்குச சென்று மரியாதை செய்தார், பேச்சு வார்த்தைகள் திருப்திகரமாக நடைபெறுகின்றன — என்ற செய்திகள் நமக்குத் தேன் துளிகளாக இருக்கின்றன! மதவெறி, அதன் விளைவாக மாச்சர்ய மனப்பான்மை வளர்வது—கூடாது என்று நாம் எப்பொழுதும் கண்டித்து வருகிறோம்.

அப்போது வளர்ந்த மாச்சர்ய மனப்பான்மை, இப்போதும் நீடிக்கிறது. இந்தியாவில் மட்டும் என்றல்ல, பாகிஸ்தானிலும் வெறிப் போக்கு விளையாடுகிறது! காந்தியடிகளே பாகிஸ்தான் பிரிவினையை எதிர்த்தவர். எனினும் பின்னர் நியாயம் நிரம்பியதுதான் அந்தக் கோரிக்கையும், அதை மறுத்தால நாடு இரத்தக் களறிக்கு இரையாகும் என்று எண்ணி பேற்றார்—இரு நாடுகள் உண்டாயின!

மதவெறியால்ஏற்பட்ட கேடு விளைவிக்கும் நாசப் போக்குக்கு முடிவு தேடும் நோக்கத்துடன் இரு நாட்டின் பிரதமர்களும் சந்தித்துப் பேசுகிறார்கள்—பேச்சு, வெற்றி தரும் என்ற நம்பிக்கைச் செய்திகளும் வந்துகொண்டிருக்கின்றன. மகிழ்ச்சி நமக்கு. இரண்டு நாடுகளும் பரஸ்பரம் நண்பர்களாக வாழவேண்டும்-

நற்பாதையில் நடக்கவேண்டும் என்பதுதான் நமது ஆசை. அதற்கான அறிகுறி: உதயமாகியிருக்கிறது.

X X X

காந்தியாரின்கல்லறையைக் கண்டு, மௌனமாக நின்ற பாகிஸ்தான் பிரதமரின் இதயம், மதவெறியின் கோர நர்த்தனம் குறித்துக் குலுங்கியிருக்கும்.

பாகிஸ்தான் பிரதமரை எதிர்கொண்டழைத்தபோது, நேரு-இந்தியப் பிரதமர்—மகிழ்ந்திருக்கலாம் 'தகராறுகள் முற்றுப் பெறும்' என்ற எண்ணத்தால். அரும்பியிருக்கும் இந்தப் புது நிலை, மலராக வேண்டும்—வெறிப் போக்குக் கொண்டோரின்இதயங்களை அன்புப் பாதையில் திருப்பிவிடவேண்டும்.

'பாகிஸ்தான் நமது எதிரி' என்ற எண்ணம் இருநாடுகளிலுமுள்ள சிலரிடையில் இருக்கிறது—பகைமையுணர்ச்சி மாறவில்லை! ஆத்திரமூட்டும் செயல்கள் மூலம் தங்கள் ஆசையைத் தணித்துக்கொள்ள முற்பட்டிருக்கின்றனர். இதன் விளைவுதான் வங்கத்தில் நடைபெறும் கோரக் காட்சிகள்! அறிவை அடகுவைத்துவிட்டு ஆத்திரத்துக்கு அடிமைப்பட்டிருக்கும் வெறியர்கள் கொட்டம் அடங்கவேண்டும்.

வெறியர்களின் வீம்பு ஒழிக்கப்பட ஆட்சியாளர்கள், ஒற்றுமையோடு ஒரு முடிவு செய்யவேண்டும். அம்முடிவை நிறைவேற்றித் தருவதில் இரு நாடுகளிலுள்ள மக்களும்-மக்களின் எண்ணங்களைப்பிரதிபலிக்கும் பத்திரிகைகளிலும் பரிபூரணமாக ஒத்துழைக்க வேண்டும்.

துரதிஷ்டவசமாக இருநாட்டின் முக்கிய பத்திரிகைகளின் போக்கு இன்னும் மாறவில்லை.

பிடாரிகள்

நாகரீகமற்றவர்கள்

இதுபோன்ற, மோசமான வார்த்தைகளால், பரஸ்பரம் இருநாட்டின் தலைவர்களையும் இருநாட்டு பத்திரிகைகளும் அழைக்கின்றன தூற்றுவதே கைங்கர்யம் எனச் செய்கின்றன.

பொய்ச் செய்திகள், திடீர் வதந்திகள், ஆவேசமான தலைப்புகள்—தாண்டவமாடுகின்றன, வெறிபிடித்தோரைத் தூண்டிவிடும் வகையில்!

இது உடனடியாக மறையவேண்டும். 'இரண்டு நாடுகளும் ஒற்றுமைப்பட்டால்தான் வாழ்வுண்டு. அதற்கான வழியில் மக்களைத் திரட்டுவோம்' என்ற மனநிலை வளரவேண்டும்.

மாச்சர்யம் வளர்ந்தால் மதவெறி தலைதூக்கும். மதவெறியின் கோர நர்த்தனத்துக்கு இரையாகி நாட்டின் மாணிக்கம் காந்தியார்—நம்மிடையே இருக்க வேண்டியவர்-கல்லறையிலே கிடக்கிறார். 'மத'வெறி கூடாது. அது மகத்தான நாசம் விளைவிக்கும்' என்ற போதனையைப் போதிப்பது போல!

அந்த நினைவு, தேசியப்பத்திரிகைகள்—மாச்சர்யம் வளர்க்கும் போக்கினர் இதயத்தில் எழும்பவேண்டும். இரு நாடுகளும், கை கோர்த்து நண்பர்களாக வாழவேண்டும்—அதுதான் நல்லது; இரண்டு நாடுகளுக்கும்!

✻

இன்றைய நிர்வாகம்

—✻—

தெள்ளத் தெளிவாக இன்றைய நிர்வாகத்தின் நிலையைப் படம் பிடித்துத் தந்திருக்கிறார் பேராசிரியர் ரத்னசாமி — அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்து பணியாற்றிய அறிஞர், இந்திய அரசியல் வல்லுநரின் தலையாய சிலரில் ஒருவர். அரசியலமைப்பு, நிர்வாக முறை ஆகியவைகளில் தலை சிறந்த சிந்தனையாளர் என்று போற்றப்பட்டவர். அனுபவமும், அதற்கேற்றஆராய்ச்சித் திறனுமிக்க அவர், அண்மையில் 'இந்திய நிர்வாகம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை பொன்றின் பகுதிகள் இவை.

"மந்திரிமார் போடும் தாளத்துக்கேற்றபடி ஆடவேண்டியவர்களாகி விட்டார்கள், அரசாங்கக் காரியதரிசிகளும், ஒவ்வொரு இலாகாவின் தலைமையதிகாரிகளும்! மந்திரிமார் எங்கேயாவது, ஏதாவது தங்கள் சொற்பொழிவின்போது கூறிவிட்டால், அக்கூற்றை நிரூபிக்க ஆதாரங்கள்—புள்ளிவிபரங்கள் ஆகியவைகளைத் தேடிக்கண்டுபிடிக்க வேண்டியதும் ராஜாங்க காரியதரிசிகளின் வேலையாய் விட்டது. அன்றன்றுடம் தாங்கள் கவனித்து 'பைசல்' செய்ய வேண்டிய அலுவல்களில்கூட அமைச்சர்களின் அபிலாஷைகளையொட்டி, அதற்கேற்றபடி அனுசரித்து நடக்கவேண்டிய சங்கடமான நிலை ஒவ்வொரு இலாகாவின் தலைமை அதிகாரிகளுக்கும் ஏற்பட்டுவிட்டது.

தனக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளுக்கு 'பிரமோஷன்' தருவது, உத்தியோக மாற்றம் செய்வது போன்ற சாதாரணமான விஷயங்களில் கூட தலைமையதிகாரிகள் மந்திரிமார் தலையீட்டிற்கொப்பவே நடக்கவேண்டியதாய் விட்டது.

இருபது, இருபத்தைந்து ஆண்டுகள் உழைத்து அனுபவம் பெற்ற அரசாங்கக்காரியதரிசிகள், தங்களது யோசனைகள் காற்றுக் கூச்சலாகிவிடுவதைக்கண்டு பேசாமல் கண்ணை மூடிக் கொண்டு மந்திரிமார்களின் கட்டளைக்கேற்ப காரியங்களைச் செய்ய வேண்டியவர்களாகி விட்டார்கள்—அவர்கள் பெற்ற அரசாங்க அனுபவமெல்லாம் விரயமாகிறது; வீணாகிறது!

சாதாரண நடைமுறை வேலைகளில் கூட மந்திரிகள் தலையிடுவதால் இலாகாக்களை பொறுப்பேற்று நிர்வகித்துவரும் தலைமையதிகாரிகளிடையில் முன்பிருந்த உற்சாகமும் ஊக்கமும் குறைந்து விட்டது 'வாங்குகின்ற சம்பளத்துக்கு எதையோ செய்வோம். எது எப்படி நடந்தால் என்ன!' என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது. இந்நிலை நீடித்தால் நிர்வாகம் சீர்குலைந்துவிடும்—சின்னாபின்னமாகிவிடும்!"

* * *

ஆட்சியாளர் மீது குறை கூற வேண்டும் என்ற நோக்கமோ, காங்கிரஸ் கட்சியின் நிர்வாகம் பற்றிய கண்டனமோ, கொண்டதல்ல. அக்கரை நடுநிலைமை மனப்பான்மையுடன், நாடு நலிகிறது என்ற சோக நினைவுடன் அவர் தீட்டியிருக்கிறார், இக்கட்டுரையை.

✻

அறிஞன் அறிவுரை

[வாணன்]

"விஞ்ஞான அறிவு பெறவேண்டுமென்ற ஆர்வம், இந்திய மாணவர்களிடையில அளவற்ற முறையிலிருக்கிறது. ஆனால் அறிவைப் புகட்டும் ஆசிரியர்களின் நிலையே பரிதாபகரமாயிருக்கிறது. இந்தியக் கல்லூரிகளில் உபயோகப்படுத்தப்படும் விஞ்ஞான ஆய்வுக் கருவிகளோ பொருட்காட்சிச்சாலைக்கு அனுப்பப்படவேண்டிய அளவுக்குப் பழமையானவைகள்! இவ்வளவு பழமையான கருவிகளை வைத்துக்கொண்டிருப்பதினால், நவீனமுறையில் ஒருசிலவினாடிகளில் செய்துவிடக்கூடிய எந்தச் சோதனையையும், இந்திய மாணவர்கள் பல மணி நேரங்களில் செய்கின்றனர். இந்த நிலையில் அரசாங்கம் அதிகமான பணத்தை கல்லிலும் மண்ணிலும் போட்டு, ஆய்வுச்சாலைக்கான கட்டிடங்களைக் கட்டுவதில் செலவிடுகிறது!"

சமீபத்தில் இந்திய விஞ்ஞானிகள் காங்கிரசுக்கு வந்துபோனபிரிட்டிஷ் பேரறிஞர், விஞ்ஞானி பேர்னால் இந்திய உபகண்டத்தில் விஞ்ஞான வளர்ச்சியைப்பற்றி மேற்கண்டவாறு கூறியுள்ளார். இந்திய உபகண்டத்திலுள்ள மக்களின் பழைமை மனப்பான்மை எந்த அளவுக்குவிஞ்ஞான அறிவைப் புறக்கணிக்கச்செய்கிறது; விஞ்ஞான அறிவைப் பரப்புவதில் அரசாங்கம் எப்படி விளம்பர வேலையோடு நின்றுவிடுகிறது; நம் நாட்டு விஞ்ஞானிகளுக்கு ஊக்கம் தந்து அபிவிருத்தி செய்யாமல் எப்படி இந்திய அரசாங்கம் விஞ்ஞானிகளையும் அனாவசியமாக அயல நாடுகளிலிருந்து இறக்குமதி செய்திருக்கிறது என்ற பல விஷயங்களில் இதற்கு முன்னால் நாம் விளக்கிவந்ததைப, பேர்னால் அப்படியே கூறியிருக்கிறார். பகட்டில் மயங்கியிருக்கும் தேசியத் தோழர்கள் பெர்னால் கூறியவற்றை ஊன்றிப் படிக்கவேண்டும்.

* X *

பூபாகத்தில் மனிதன் தோன்றிய காலந்தொட்டே அவனுடைய அறிவு ஆராய்ச்சியில் இறங்க ஆரம்பித்துவிட்டது அவனுடைய அறிவு வளர்ச்சி அவனுக்குப் பலவசதிகளைத் தேடித்தந்தது. மேலும் மேலும்பல வசதிகளை அடைய, அவன் அறிவாராய்ச்சியில் ஈடுபட்டவண்ணமிருக்கிறான். ஆகவேதான் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தின் அளவுகோல் "விஞ்ஞானம்". நாட்டுமக்களின் மீது அக்கரைகொண்ட எந்தச் சர்க்காரும் விஞ்ஞான ஆராய்ச்சியில் கவனம் செலுத்தாமலிருக்க முடியாது. தொழிலியலில் பலவசதிகளைப் பெறவும், மருத்துவத் துறையில் நன்மை பெறவும், மற்றும் பலதுறைகளிலும் மக்கள் வசதி பெறுவதற்கு விஞ்ஞான ஆராய்ச்சி நிலையங்களை நிறுவ வேண்டியது நாகரிகச் சர்க்காரின் கடமையாகிறது.

இந்த வேலையை மேற்கொண்ட இந்திய சர்க்கார் பல ஆராய்ச்சி ஸ்தாபனங்களை இந்திய உபகண்டத்தில் நிறுவமுற்பட்டுள்ளனர். அவைகளைப்பற்றித்தான் அறிஞர்பெர்னால் தன்கருத்துக்களை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"விஞ்ஞான ஆராய்ச்சி" என்று கூறிக்கொண்டு பலலட்சரூபாய்களைச் செலவிட்டுக் கட்டிடங்களைக் கட்டிவிட்டால் மாத்திரம் போதாது. அறியாமையில் சூழ்ந்திருக்கும் மக்களை மலைக்கச்செய்து, ஓட் பெறுவதற்குத்தான் இந்தக் கட்டிடங்கள் பயன் பெறுமே தவிர, உண்மையில் விஞ்ஞான வளர்ச்சியடைய செய்பவேண்டிய ஆரம்பவேலைகள் பல இருக்கின்றன.

"விஞ்ஞானி' என்ற தனி மக்கட் கூட்டம் பிறவியிலேயே உண்டாவதில்லை. நல்லபடிப்பு வசதியும், அறிவைப் புகட்ட ஆற்றலும் ஊக்கமும் நிறைந்த ஆசிரியர் கூட்டமும் விஞ்ஞானிகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவைகள். இந்த இரண்டு வசதிகளும் இன்றைய இந்தியாவில உண்டா?

'இல்லை' என்கிறார் பெர்னால்!

இன்றைய தினத்தில், பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், இருக்கும் விஞ்ஞானக் கருவிகளின் தன்மையை பெர்னால் சுருக்கமாக விளக்கியிருக்கிறார். மிகவும் பழைய காலத்துக் கருவிகள். அந்தச் சாதனங்களை வைத்துக்கொண்டு படித்துவிட்டு வெளியேறும் மாணவனுக்கு ஆராய்ச்சியிலீடுபடுமளவுக்கு அறிவுத்திறமை எப்படி வரும்? நவீன ஆய்வுக் கருவிகளைப் பார்த்த மாத்திரத்திலேயே அவனுடைய மனம் நெடித்துவிடும். சென்ற ஆண்டிலே சுமார் ஒருகோடியே முப்பது லட்ச ரூபாய்கள் விஞ்ஞான, தொழிலியல் ஆராய்ச்சிக்கெனச் செலவிட்டிருப்பதாக நேரு சமீபத்தில் கூறினார். இதில் எந்த அளவு பள்ளி மாணவர்களை ஆராய்ச்சியாளராகத் தயாரிப்பதில் செலவிட்டிருப்பார். எத்தனையோ பள்ளிகளில தனியான ஆய்வுச்சாலைகள் கிடையாது.

பல கல்லூரிகளில் விஞ்ஞானம் பயில விரும்பும் மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. இம்மாதிரி விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அடிப்படையான, அறிவுத் திறம் வாய்ந்த மாணவர்களைத்தயாரிப்பதற்குச்சர்க்கார் என்ன செய்தது? பதில ஒரு பெரு மூச்சு விடுவதைத் தவிர வேறெதுவும் கூறமுடியாது.

விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களைத் தயாரிக்கக் கூடிய 'ஆசிரியர்கள்.' அவர்களுடைய பஞ்ச நிலையைப் பற்றிப் பெர்னால கூறினதைவிட நமக்கே நன்றாகத் தெரியும். வாழ்வதற்கே போராடும் ஆசிரியர்கள் வருங்கால ஆராய்ச்சியாளர்களை எப்படி உண்டாக்க முடியும்? ஏதோ தங்கள் கடனை ஒழித்தால் போதும் என்று திரும்பத் திரும்ப ஒரே பாடத்தை எந்தவித உணர்ச்சியுமில்லாமல் சொல்லிக் கொடுத்துவிட்டு அனுப்புகின்றனர்.

"பழைமையான சோதனைக் கருவிகள், ஏழ்மையில் போராடும் ஆசிரியர்கள், வசதியற்ற வாழ்க்கை"

இந்தச் சூழ்நிலையில் தயாரான மாணவர்களின் கதி என்ன? கஷ்டப்பட்டு அவர்கள் வாங்கும் பட்டமும், ஆவலுடன் அவர்கள் படித்த படிப்பும் விழலுக்கு இறைத்த நீராகிறது. ஆய்வுச் சாலையில் சோதனைக் குழாய்களைப் பிடித்த கைகள், வாழ்க்கையில் நான்கு சுவர்கட்கு இடையில்பேப்பர்க்கட்டைப்புரட்டிக் கொண்டு "பஞ்சப்படி குமாஸ்தா"க்களாக காலந்தள்ள நேரிடுகிறது. அவர்களுடைய விஞ்ஞான அறிவு பயனற்றதாக்கப்படுகிறது, வெளியுலகில். மாணவப் பருவத்தில் அவனுக்கிருந்த அறிவியல ஆசைகள் சுக்கு நூறாக்கப்படுகிறது.

நாட்டிலே விஞ்ஞானத்திற்கு மதிப்பில்லை. அமெரிக்காவிற்கும் ஐரோப்பாவிற்குப் சென்று படித்து விட்டு வந்த பல மாணவர்கள் வேலை கிடைக்காமல், சாவிற்கு அஞ்சி குமாஸ்தாக்களாகவும் வியாபாரிகளாகவும் மாறிவிடுகின்றனர். மக்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை — நோயாளிகளுக்கு மருந்து வாங்கும்போதும் கடைத்தெருவில் நவீன சாமான் வாங்கும்போதும் விஞ்ஞான வசதிகளை அனுபவிக்கும் போதும் அவைகளைக் கண்டுபிடிக்க உயிரையிழந்த பல்லாயிரக் கணக்கான விஞ்ஞானிகள் ஞாபகம் அவர்களுக்கு வருவதில்லை. மேலும் விஞ்ஞான வசதிகளை அடைய இளம் விஞ்ஞானிகளைத் தயார் செய்ய, உதவியையும் நல்லெண்ணத்தையும் அவர்கள் தருவதில்லை. ரமண ரிஷிக்கும், சங்கராச்சாரிக்கும் அவர்கள் கொடுக்கும் மதிப்பில ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இந்திய விஞ்ஞானிகளுக்கு அவர்கள் கொடுப்பதில்லை. பண்டாரச் சன்னதிகளின் காசிப்பயணமும் சங்கராச்சாரிகளின் கயா யாத்திரையும், ரமணரின் நாடி ஓட்டம் பற்றியும் தினம்எட்டு இடத்தில் பிரசுரிக்கும் தேசியப்பத்திரிகைகள், ஒரு இடத்திலாவது விஞ்ஞானியின் நிலையைத்தெரிவிக்கவிரும்புவதில்லை. சி. வி. ராமனின் விலாசம் என்ன? பாபாவின் இருப்பிடம் எது? ராய் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்? சந்திரசேகரனின் ஆராய்ச்சி என்னவாயிற்று? ஜகதீஷ் சந்திர போசின் இறந்த தினம் எது? என்ற பல விஷயங்கள் மக்கள் முன்னிலையில வைக்கப்படுவதேயில்லை.

"மக்களும்' மதிப்பதில்லை. அவர்களுடைய மனதைத் திருப்பும் தேசிய பத்திரிகைகளும் மதிப்பளிப்பதில்லை.' இந்த நிலையில் விஞ்ஞானிகளின் நிலை எப்படி இருக்கும் என்பதைவிளக்கத்தேவையில்லை. எந்தப் புதியதொழிலை ஆரம்பித்தாலும் மெஷின்களை வரவழைப்பது போல மேல் நாடுகளிலிருந்து விஞ்ஞானிகளையும் வாடகைக்கு அழைத்து வந்துவிடுகின்றனர். ஆகவே இந்திய விஞ்ஞானிக்கு அங்கும் மதிப்பில்லை.

இந்த நிலையில் அரசாங்கம் என்ன செய்கிறது. காசைச் செலவு செய்து கட்டிடங்களைக் கட்டுகிறது. பிறகு அதில் வேலை செய்ய விஞ்ஞானிகளைத் தேடிக் கிடைக்காமல் வெளிநாட்டிலிருந்து நிபுணர்களை வரவழைக்கிறார்கள். அப்படி வரவழைக்கப்படுபவர்களுக்குத் தரப்படும் ஊதியம் பல ஆயிரம் ரூபாய்கள். இருக்கின்ற இந்திய விஞ்ஞானிக்கு மதிப்பில்லை. மேலும் இந்திய விஞ்ஞானிகளை உற்பத்தி செய்யும் அக்கறையும் கிடையாது. ஆனால் மக்களுடைய பணம் மாத்திரம் விரயமாக்கப்படுகிறது.

"இந்த சர்க்கார், எடுத்ததற்கெல்லாம் அயல் நாட்டு விஞ்ஞானிகளை நாடுவதைக்காண வேடிக்கையாய்த்தானிருக்கிறது" என்று சி. வி. ராமன் சின்னாட்களுக்கு முன் கூறினார். 'சுத்த சுதேசி' என்று கோஷம் போட்டு வந்தவர்கள், இன்று அவசிய மற்றவைகளுக்கெல்லாம் அயலாரை நாடுவது நகைப்புக்கிடமானதுதான். சிறிய அளவிலாவது ஆரம்பத்தில் இந்திய விஞ்ஞானிகளுக்கு வேண்டிய வசதிகளைச்செய்து தருவதோடு, மேலும் மேலும் பல இளைஞர்களை விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தயார் செய்ய வேண்டியது சர்க்காரின் கடமை. இதை எந்த அளவுக்கு நேரு சர்க்கார் நிறைவேற்றுமென்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விஷயம்

அப்படி நேரு சர்க்கார் இதில் கவனம் செலுத்த மறுத்தால் என்ன நேரிடும்?

நமக்கு வேண்டியமருந்து சாமான்களுக்கும், இயந்திரங்களுக்கும், மின்சார கருவிகளுக்கும் மற்றும் பல நவீன ஆராய்ச்சிக் கருவிகளுக்கு அயல் நாடுகளை நம்பியே வாழவேண்டும். நம்பி வாழ வேண்டுமென்றால், கோடிக்கணக்கான ரூபாய்களை ஆண்டுதோறும் கொட்டிக்கொடுத்து வெளியார் சாமான்களை வாங்கவேண்டும், நம் உபயோகத்திற்காக. பலன் என்ன? நம்முடைய தேசம் மறுபடியும் மார்க்கெட்டாக மாறும். பொருளாதார ரீதியில் நாம் மற்ற நாடுகளுக்கு அடிமையாவோம். இதுதான் பல்வேறு நாட்டுச் சரித்திரங்கள் நமக்கு காண்பிக்கின்றன.

முடிந்த வரையில் நம்முடைய உழைப்பிலேயே நாம் வாழவேண்டும். முடியாவிட்டால் தற்காலிகமாக மாற்றானுடைய உதவியைப் பெறலாம். எல்லா நேரத்திலும் மாற்றான் உதவியிலேயே வாழ வேண்டுமென்று விரும்பினால், அதன் முடிவு மாற்றானுக்கு அடிமைப்படவேண்டியதுதானே. இதைத்தான் அறிஞர் பெர்னல் சுட்டிக் காண்பிக்கிறார். தன்னுடைய பேசசின் முடிவில்,

"தற்போதைய நிலையில் இந்தியாவில் செய்யப்படும் எந்தப் பெரிய தொழிற் திட்டங்களும் கூடியவரையில் தன்னம்பிக்கையிலேயே ஆரம்பிக்கப்படவேண்டும். முதலில்எந்தத் திட்டத்திற்கும் உள்நாட்டு இயற்கை வளத்தையும் மனித உழைப்பையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் அப்பொழுதுதான். வெளி நாட்டு மூலதனத்தை எதிர்பார்க்காமல் முன்னேற முடியும். இந்த விஷயத்தில் சோவியத் ரஷ்யாவில் பிற்போக்குப் பிராந்தியங்களைச்சீர் திருத்திய முறையை இந்திய அபிவிருத்தியில் அக்கரை கொண்டவர்கள் படித்துத் தெரிந்து கொள்ளவேண்டும்" என்று பேசியிருக்கிறார்.

பொழுது விடிந்து பொழுது போனால் வெளிநாட்டு மூலதனம், இன்ஜினியர், விஞ்ஞானி, இயந்திரம் இவைகளைப் பற்றிப் பேரம் பேசிய வண்ணமிருக்கும் நேரு சர்க்கார், அறிஞர் கூறும் அறிவுரையைக் கவனிக்குமா? சர்க்கார் கவனித்தாலும் கவனிக்காவிட்டாலும் மக்களாவது கவனிப்பார்களா? பணம் பாழாக்கப்படுவது மாத்திரமல்லாமல், நாடாவது, டாலருக்கு அடிமையாகாமலிருக்குமா?

—()—

மணப்போர்

தில்லை வில்லாளன்

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு வித குறைபாடிருக்கும். அதைத் தெரிந்துகொண்டால் அவர்களை விருப்பம்போல் ஆட்டுவிக்கலாம்... அப்படி ஏதாவது தந்திரத் திட்டமிட்டு இப்படிப் பாக்கியத்தை அழைத்தானா? பெண்மையின்குறையைப்பயன்படுத்தி அவளை இக்கட்டில் மாட்டுவிக்க நினைக்கிறானா...? சேரன் வஞ்சகக்காரனா? இல்லை. இருக்கமுடியாது! காதலனேதான்... சாதகனே அல்ல!

பிறகு பாக்கியத்தை அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றான். இருவருமே அமர்ந்து ஒருங்கிருந்து உண்டனர். பிறகு அவனுக்குப் படுக்கையை விரித்துக்கொடுத்தாள். அவனுக்கு முத்தமும் இட்டு, இரவு வணக்கம் தெரிவித்துவிட்டுத் தன் தனியறைக்குச்சென்றுவிட்டாள்!...

இந்த நிகழ்ச்சிகளை அப்படியே எழுதியிருந்தாள் பாக்கியம். தான் நடந்துகொண்டது சரியா, தவறா... என்று கேட்டிருந்தாள். இனிஎப்படி நடந்துகொள்வது என்று யோசனையும் கேட்டிருந்தாள். அவனது அன்பழைப்பிற்கு இணங்கிவிடலாமா... என்றும் கேட்டு வைத்திருந்தாள், இடையே ஓரிடத்தில்!.........லில்லி அதனால்தான் அதுபற்றிய சிந்தனையாகவே இருந்தாள்.

சொந்தக் கதை

இந்தக்கதைகள் அவளதுசொந்த வாழ்க்கையைப் பாதித்தன. சேரன் ......சேரன்...என்று பாக்கியம்எழுதிய வரிகளைப் படிக்கும்பொழுதெல்லாம் அவளுக்கு நீலனுடைய உருவம்தான்கண்முன்னால்வரும். அவன் அவளுடன் படிக்காவிட்டாலும், படித்தபொழுது வேறொரு பள்ளியில் படித்துக்கொண்டிருந்தான். காலையில் பள்ளிக்குப்போகும்பொழுதும், மாலையில் திரும்பும்பொழுதும் சந்திப்பர். அவன் அவளை பார்ப்பான்......உள் எண்ணம் விழியில் தெரியுமாறு! சிலநாள் அவள் அசட்டையாக இருந்தாள். பிறகு அவளுக்கும் அவனைப் பார்க்கவேண்டும் போலிருந்தது.

பிறகு அவளும் பார்த்தாள்...... கண்கள் கவ்விக்கொண்டன! பிறகு அடிக்கடிச் சந்தித்தனர். அவன்ஏதாவது கதைப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு வருவான். மணிக்கணக்கில் பேசியிருப்பான்.பிறகுபிரிந்துச்செல்வான். பள்ளிப் படிப்பு முடிகிற நேரத்தில் அவர்கள் நட்பு காதலாக மாறத் தொடங்கியது! லில்லி மதுரைக்குப் போகும்பொழுது கண்ணீரால் விடைபெற்றாள். அவனுக்கு ஓய்வில் கடிதம் போடுவதாகச் சொல்லிவந்தாள். அப்படியே அவனுக்கு ஒரு முடங்கல் தீட்டினாள்... நண்பரே, பள்ளிப் பருவத்தில் தங்களிடம்தான்பேசினேன்; பழகினேன். என் அன்பு உள்ளத்தில் நீங்கள் எப்படியோ இடம் பிடித்துவிட்டீர்கள். நம் அன்பு வளரட்டும்......இப்படி எழுதினாள். கடிதத்தின் முறையும், வார்த்தைகளும்மாறின.மாறுவதற்கு அதிக நாட்கள் பிடிக்கவில்லை. கண்மணியே......கண்ணாளா....தொடக்கம் இப்படி!! அன்புஅணைப்புகள்.... ஆசைமுத்தங்கள்......முடிவுரைகள் மாதிரிக்காக!

லில்லி பெற்றோரிடம் சொல்லி எப்படியும் நீலனைமணப்பதென்றுமுடிவு செய்துகொண்டாள். ஆனால்நீலனின் முடிவான விடை வேண்டுமே......! அதற்காக ஒருபெரிய முடங்கல் எழுதினாள். திடுக்கிட்டாள்; எதிர்பார்த்த விடை வரவில்லை. திருமணத்திற்கு அவசரம் என்ன......என் படிப்பு முடியவில்லை......பெற்றோர்கள் சீறுவார்கள்......இப்படி மழுப்பியிருந்தான். ஆனால் நேரில் வருவதாக மட்டும் எழுதியிருந்தான்.

அவன் எதற்காக நேரில் வரவேண்டும்? பாக்கியத்தை நாடி வந்த சேரனைப் போலவா......கண்ணே, மணியே என்று கொஞ்சிக் குலவிவிட்டு ஓட்டம் பிடிக்கவா? பிறகு லில்லி......ஐயோ என் காதலரே, அன்று வந்தீர், இன்பந் தந்தீர், அதற்கு அடையாளமும் வந்துவிட்டதே வயிற்றில்......வந்து என் கவி தீருங்கள், திருமணம் செய்வதன் மூலம்...என்று கெஞ்சிட வேண்டிய நிலையை உண்டாக்கவா? ஆணை, அதிகார பீடத்தில அமர்த்தி, பெண் மண்டியிட்டு நிற்கவா? குற்றவாளியை நீதிபதியாக்கி, கொடுமைக்காளானவள் அறம் வேண்டி நிற்பதா? இது கூடாது, ஆகாது... அவளை விரும்புபவன், அவளது காதலை ஏற்கத் துடிப்பவன், திருமணம் என்றவுடன் தயங்குவானேன்? இது ஆண்கள் சாகசமா... வஞ்சகமா? அவளிடம் அன்பு மழை கொட்ட வருகிறான்...ஆனால் திருமணக் குடை கேட்டால் இல்லையென்கிறான். மழையிலே நனைந்து

நடுத்தெருவில் இன்பக் குளிரால் ஏங்கி நிற்பதா? விடுதியிலே சந்தித்த போது, ஊருக்குச் செல்கையிலே வழிகூட்டி யனுப்பும்போது, கன்னியரை மயக்கி பிறகு கைவிட்ட, 'கனவான்களை' கண்டபடி திட்டினனே... பெண்கள் ஏமாந்தவர்கள், அவர்கள் எளிதில் ஆண்களின் அன்புப் படையெடுப்பில் தோற்றுவிடுகிறார்கள். அது கூடாது...என்று நீதியுரை வழங்கினனே! பின் ஏன் திருமணம் என்றவுடன் திகைக்கிறான்...உண்மையில் காதலிக்கிறனா...கிடைத்தவரை இலாபம் ... அகப்பட்டதைச் சுருட்டடா ஆண்டியப்பா......காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்...இப்பேர்க்கொத்த 'மாக்கிவெல்லி' தத்துவங்களைக் (!) கடைப்பிடித்து கிடைத்துள்ள லில்லியைத் தன் பருவத் துடிதுடிப்பை அடக்கிக் கொள்ள ஒருகருவியாக்கப் பார்க்கிறனா...... ஒன்றுமே புரியவில்லையே......நீலன் வாழ்வளிப்பானா, வஞ்சனை புரிவானா?

அவனை வரச் சொல்வதா...வந்து தந்தையின்சந்தேகத்தையும்கிளப்பி, பிறகு விபரீத துரோகத்தில் முடிந்தால் என்ன செய்வது......ஆகவே அவன் வரக்கூடாது, வரவேகூடாது ......அவன் வரவைத் தடுக்கவேண்டும்...........நாளைக்கே ஒரு கடிதம் எழுதிவிடவேண்டும்! ஆண் தான் கோயில்காளை.........கண்ட இடங்களில் திரியலாம். பெண் அப்படியல்லவே, கொட்டிலிலே கட்டிக்கிடக்கும் பசு! நீலன் இதையறியாதவனா?

இப்படி அவள் சிந்தித்துக்கொண்டிருக்கும் பொழுது பாக்கியத்தின் கடிதம் வந்தது. ஆகவே, அவளுக்கு எப்பொழுதும் இந்த 'அகநானூறு' கனவுகளாகவே போய் விட்டன! வேலை செய்யவில்லை—முடியவில்லை. பொறியிலே விரல்களைப் பதித்து வார்த்தைகளை அடித்தால் தப்புத் தப்பாக விழுந்தன......அவளுக்கு அப்படியே முகத்தை மூடிக் கொண்டு அழலாம் போலாகிவிட்டது!

அவளது மனம் பிளாசி யுத்தகளமாகிவிட்டது! முகலாயப்படை சமாளிக்க முடியாத அளவு வெள்ளையர் படை வந்துவிட்டது. வெற்றிக்குக் காரணமாக மீர்ஜாபரின் படையும் வெள்ளையருடன் சேர்ந்துகொண்டது! அதுபோல அவளது மனப் போர்க்களத்தில் வேறொரு படை, வந்து விட்டது! ஒரு நாள் லில்லி காலையுணவுண்டு, குடையை எடுத்து விரித்தபடியே வீட்டைவிட்டுப் பணிமனையை நோக்கி நடந்தாள். வழியிலே வந்த அஞ்சல்காரன் இரண்டு பதிவுத் தபால்களைக் கொடுத்தான் கையெழுத்துப் பெற்றுக்கொண்டு அவன் போய்விட்டான். கடிகார முட்கள் அல்லவா அஞ்சல்காரர்கள் ......அவர்கள் நிற்கமுடியுமா?

போட்டி

பணிமனை சென்றவுடன் உறையைப் பிரித்தாள். முதல் வரியைப் படிக்கத் தொடங்கியதுமே அவள் முகம் ஆச்சர்யத்தால் விரிந்தது... கடிதத்தை முடித்தவுடன் அவள் சிலைபோல வீற்றிருந்தாள்...என்ன கடிதம்?...அன்புள்ள லில்லிக்கு... காதலி லில்லிக்கு என்று கடிதம் எழுதப் போவதாகக் கற்பனைக் கனவுகள் கண்டு கொண்டிருந்த கரம் எழுதுகிறது. நேரிலே சந்தித்துச் சொல்லவேண்டும் என்று நெடு நாள் ஆசை. சொல்வது அவசியம் என்று என் மனம் எண்ணியபோது நெஞ்சில் துணிவில்லை. துணிவிருக்கும் பொழுது சொல்லவேண்டிய அவசியமில்லை என்று பட்டது. அவசியமும், துணிவும் சேர்ந்திருக்கிற நேரத்தில் ஆள் இல்லை என் நிலை கையறு நிலைதான்! உன் வாழ்க்கைப் பாதை மாறிவிட்டது......அந்தப் பாதையில் வேறு அடிச்சுவடுகள் தெரிந்தும் எழுதுகிறேன். இரண்டாண்டுகளாக மனத்திலே புழுங்கியிருந்த ஆசை, கற்பனைகட்டியகாதல் கோட்டை, இலட்சியம் வளர்த்த இன்பக்கொடி...இந்த இடத்திலே நான் அள்ளிக்கொட்டியிருக்கும் வார்த்தைகள்! என் வாழ்வு மணம் பெற லில்லி வேண்டும் நிச்சயமாக! அவள் கிடைப்பாளா? பொன்னான காலம் போய்விட்டதா?....நான் அறியேன். சொல்ல நினைத்ததைச் சொல்லி விட்டேன். அது என் கடமை. காலம் நிர்ணயிக்கட்டும், இந்தக்காதல் சிக்கலின் முடிவை! ஆனால், ஒரு வரம்... லில்லி...கொடுப்பாயா? இந்த வாழ்வில் மறக்க முடியாத இலட்சிய ஓவியம் நீ..........உன்னையே எனக்களிக்க மறுத்தாலும் நான் பார்த்து மகிழ உன் படம் மட்டும் எனக்கு வேண்டும். அந்தப் படம் எனது இன்பக் கோயிலின் தெய்வச் சிலையாக இருக்கட்டும்...இந்தக் கடிதத்தைப் படிப்பதற்கு முன்னால் 'மனப்போர்' என்ற புத்தகத்தைப் படி... ஒரு முறைக்கு, மும்முறை! அமரன் என்ற அருமையான ஆசிரியன் எழுதிய கதை......படித்த பிறகு சொல்வாய், அது கதையில்லை, லில்லிக்காக வேலன் எழுதிய ஒரு உண்மை விளக்கம் என்று!......நான் சொல்ல வேண்டியவை அத்தனையும் அதிலே அமரன் சொல்லிவிட்டார். எழுத்தாளர்கள் அத்தனைபேரும் பொதுவுடைமைவாதிகளே! என் மனங்களில் பூட்டிவைத்திருக்கும் எண்ணச்செல்வங்களைக்களவாடியதுமட்டுமல்லாமல் ஏடாக்கி எல்லோருக்கும் பகிர்ந்து தந்து வருகிறார்கள்...ஆம், அன்பான லில்லி...என் எதிர்காலத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுகிற லில்லி, விடையெழுது. இந்த எண்ணம் தவறானால் மன்னித்துவிடு.........சரியென்றால் நேரில் வருகிறேன். நாளையே நம் திருமணத்தை முடித்துவிடுவோம்....மறுத்து விட்டாலும் உன்னை மறுக்கமுடியாது... முடியவில்லை! இது அளப்பல்ல, உண்மை, முழுக்க, முழுக்க...இங்ஙனம்காதல்பிச்சைகேட்கும்வேலன்... என்று கடிதம் இருந்தது. லில்லியின் மனக்கடலில் எவ்வளவு கொந்தளிப்பு...எத்தனை அலைகளின் கும்மாளக் கூத்தாட்டம்...இரைச்சலின் ஏகாதிபத்தியம்! இந்தக்கடிதத்தைப் படித்தவுடனேயே நீலன் மீது வளர்ந்த சந்தேகம், வெறுப்பாக,... லேசாகத்தான்!......மாறத் தொடங்கிற்று.

பிறகு 'மனப்போர்' என்ற ஏட்டைப் புரட்டினாள்...அதுவும் அவனாலேயே அனுப்பப்பட்டிருந்தது ...மேலட்டை மிக மிக அழகாக அமைந்திருந்தது. தலைவிரி கோலமான ஒரு வாலிபனின் தோற்றம்... அவனைச் சுற்றி கடல் அலைகளின் தாவல்......காற்றின் முறைகெட்ட சுழற்சி...இப்படி முகப்பு அமைத்த ஓவியன் சித்தரித்திருந்தான். அந்தக் கதை ஒரு வாலிபன் சொல்வது போலவே எழுதப்பட்டிருந்தது.

கதை சாதாரணமான கதைதான்......ஒரு பெண்ணை வாலிபன் ஒருவன் காதலிக்கிறான். அவளை அவனுக்குத் தெரியும். அவளுக்கும்

அவன் யார் என்று தெரியும். பேசியதுமில்லை. பேசவேண்டிய சந்தர்ப்பமும் இல்லை. ஏற்படுத்திக்கொள்ளவும் விரும்பவில்லை. அவன் மனக் களத்தில் அன்பு விதைவிட்டு ஆசைக் கதிர்கள் ஆடுகிற வரை பயிரை வளர்த்துவிட்டான். அதை அவளிடம் சொல்ல வேண்டும். சொல்லவோ வெட்கம்......பயம்......சந்தேகம்........ஆனால் ஆசையை... காதலை...அடக்க முடியாத அளவு முற்றவிட்டு விட்டான். அப்பொழுது பட்டணத்திலிருந்த ஆள் ஒருவன் அவளது வீட்டிற்குப் பக்கத்தில் வந்து மூன்றுமாதங்கள் தங்கியிருந்தான். வந்த ஒருவாரத்திலேயே அவளிடம் பேசவும், பழகவும் தொடங்கிவிட்டான்.........அவன் மனம் எப்படி இருக்கும்......வெடிக்கும் எரிமலையாகி இருக்காதா...... பிறகு ஒருநாள் சந்திக்கிறான். கேட்டும் விடுகிறான். அவள் அழுதாள், தேம்பினாள்! ஏன்? அவள் மனமார அவனைக் காதலித்தாள்........காதல் செத்துமடியவில்லை! ஆனால், பட்டாளத்து வாலிபனுக்குத் தன் ஒப்புதலைச் சொல்லியும்விட்டாள். அவளது பெற்றோர்களும் அதற்கிணங்கி வைதிக முறைப்படி நிச்சயதார்த்தம் செய்துவிட்டார்கள். இவனோ வேறு சாதி......என்ன செய்வான்? அவள் நினைவாகவே பித்துக்கொண்டவன்போலவே திரிகிறான். தினம் ஒரு பக்கமாக தன்மனதிலே நடந்த போராட்டங்களைச் சித்திரிக்கிறான்... அதுதான் மனப்போர். அதை மிக அழகாக, உள்ளமுருகிடும் வகையில் எழுதியிருந்தார் அந்நூலாசிரியர்.

லில்லி ஏட்டைப்படித்தாள். மீண்டும் ஒருமுறை முடங்கலை வரிக்கு வரி நிறுத்தி, நிறுத்திப் படித்தாள்!

அவள் மனம் வெடி வைத்த பாறைபோல சிதறிச் சுக்கு நூறாகி விடும்போலாகிவிட்டது!

அவள் மனம் அப்பொழுது ஒரு பந்தய வெளி......நீலனும், வேலனும் ஓட்டப்பந்தயம் ஓடுகிறார்கள். யார் வெற்றி பெறுவார்கள்? நீலனிடம் ஏதோ ஒரு மயக்கம் அவளுக்கு... அது பழக்கத்தினால் ஏற்படுகிற சலசலப்பு என்பது அவளுக்குத்தெரியவில்லை. அது உண்மைக் காதலின் ஆரம்ப நடவடிக்கை என்று அவள் எண்ணினாள். வேலனிடம் அவளுக்கு இயற்கையாகவே ஒருவகையான மதிப்பு, அன்பு கலந்ததுதான்! அவனது நீண்ட கடிதத்தைப் படித்த பிறகு அன்பு வளர்ந்து நின்றதே தவிர குறையவில்லை. ஆணின்மீதுள்ள மதிப்பு என்ற 'டிகாக்ஷனும்' அன்பு என்ற பாலும் கலந்து, பெண்ணின் ஆர்வம் என்ற சர்க்கரையும் சேர்ந்துவிட்டால், காதல் என்ற 'காபி' தயாராகிவிடும்! லில்லி வேலனையும் விரும்பத்தான் செய்தாள்......ஆனால் அவனைத்திட்டவும் அவள் மனம் இடந்தந்தது! ஏன்? இரண்டாண்டுகளாக இந்த எண்ணத்தை ஒளித்து வைத்திருப்பானேன்? எத்தனை முறை சந்தித்த இவன் சொல்லியிருக்கக் கூடாதா? அவளது மனதிலே ஒரு புயல் வீசச்செய்துவிட்டானே! இவன் அறியாத குழந்தையா? நாடகத்திலே நடிக்க ஒத்துக்கொண்டு 'பவுடர்' பூசமாட்டேன், பேசத் தெரியாது, பாடமுடியாது. வேற்றுடை அணியேன்......என்று நடிகன் சொல்லலாமா? காதல் அரங்கத்தில் இறங்கியபிறகு பேச வெட்கம், கேட்க பயம், பதிலிலே சந்தேகம் என்று பல்லவி பாடலாமா? அப்பொழுதே அவன் கேட்டிருந்தால் அவள் மறுத்தா சொல்லியிருப்பாள்! பெண் பார்வையே ஒரு பல்கலைக்கழகம்..... அதிலே பத்துநாட்கள் பயின்றாலே போதும்! காதல்பட்டம் பெற்றுவிடலாமே!

அவள் என்ன செய்வாள்? நீலனை வரச் சொல்லி எழுதுவாளா? அல்லது வேலனின் காதலை ஏற்பாளா? நீலன், வேலன்.........இவர்களில் யாரை அவள் ஏற்பாள்? எடைப் பொருளா நிறுத்துப் பார்க்க...... தங்கமா, உரைத்துப் பார்க்க...... அரிசியா, அளந்து பார்க்க! அழகான, அறிவுள்ள ஆடவர்கள். பெண்மையைக் கவரும் பண்புகள் இருவரிடமும் உள்ளன. இருவரும் அவளுக்குத் தெரிந்தவர்கள்...... ஆனால் கொஞ்சம் வித்தியாசம்— நீலனுடன் பேசி உறவாடியிருக்கிறாள். வேலனுடன் அந்த உறவு இல்லை. ஆனால் அதற்காக அவள் ஏங்கிய நாட்கள் உண்டு. அவன் எதிர்பார்த்தது உண்டென்று அவனே எழுதுகிறான்! பேச்சு உறவைத் துச்சமெனத் தள்ளிவிடவும் முடியாது! ஏன்......அதுதான் முன்னுரை, காதல் புத்தகத்திற்கு!

நீலன் கோழைபோல இருக்கிறான் கொள்கையில்......திருமணம்செய்ய முடியாதவன் போலவே தோன்றுகிறான். அவன் நிலைமை வைதீக அகழியினால் சூழ்ந்த கோட்டை போலவே இருக்கிறது. லில்லி விலைமகளா...என்ன...அவனிடம் இன்பக் கூட்டுறவுப் பண்ணை வைத்து நடத்திவிட்டு ஓட! அவள் குடும்ப மணிவிளக்கு...வீட்டுக் குளிர் தென்றல்...இல்லத்து எழிலரசி! அவள் முறைப்படி மணக்க வேண்டும். ஆனால் அதில் காதல் முன்னின்று நடத்தவேண்டும். வேலன் திருமணம் செய்யத் தயக்கிறான்...... லில்லியின் மனதை யார்தான் வருணிக்க முடியும்?

(தொடரும்)

மணமகள் தேவை

40-வயதுடைய முதலியார் வகுப்பைச் சார்ந்தவரும், மாதம் 150 ரூபாய் வருமானம் பெறக் கூடிய வருமான ஒருவருக்கு 25 முதல் 30 வயதுக்குள்ளான ஓர் விதவை தேவை. எந்த வகுப்பாயிருப்பினும் எழுதப் படிக்கத் தெரிந்தவராகவும், சுமாரான அழகுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

விவரங்களுக்கு:

"திராவிடன்"
18, பெருமாள் முதலி தெரு,
ஜி. டி. சென்னை.

சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதாரர்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
105 Tirukkachinambi Street, Kancheepuram,